பாதுகாவலன்
PATHUKAVALAN

## ஆயரின் நன்றி

சுவிற்சர்லாந்தில் திருச்சி லூவைக் கன்னியர் மருத்துவ மனையிற் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்ட யாழ். ஆயர், தமது சத்திரசிகிச்சை திருப்திகரமாக அமைந்துள்ளதாக அறிவித்துள்ளார். இச்சத்திரசிகிச்சையை மேற்கொள்ளத் தம்மைத் தூண்டியதோடு, அதற்கு வழிவகுத்த இங்குள்ள குருக்கள், கன்னியருக்கும், தமக்காக ஜெபித்த அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவிக்கும்படி கோரியுள்ளார்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED

மலர் 113 இதழ் 33 18-9-1987 (செப்டெம்பர் 14-செப்டெம்பர் 20) பிரதி ரூபா 1-00 இலங்கையில் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

### இனங்களுக்கிடையேயான நீதி, சமத்துவ இயக்கம் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தது:

# புதிய சிங்களக் குடியேற்றத்தை எதிர்ப்போம்

**"தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிற் புதிய சிங்களக் குடியேற்றங்களை, இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபின், இலங்கை அரசு செய்து கொண்டிருந்தால் அதனை நாம் ஆதரிக்க மாட்டோம்" என இனங்களுக்கிடையேயான நீதி, சமத்துவ இயக்கத் தலைவர் திரு. சாள்ஸ் அபயசேகர தெரிவித்தார்.**

ஈழமுரசு, செப். 8

"ஒப்பந்தத்தில் வரையப்பட்டவை செயற்படா விட்டால், அதனை நாம் எதிர்ப்போம். தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிற் புதிய சிங்களக் குடியேற்றங்களை ஒப்பந்தம் ஏற்பட்ட பின் இலங்கை அரசு செய்து கொண்டிருந்தால், அதனை நாம் ஆதரிக்க மாட்டோம்; அதனை எதிர்ப்போம். இனக் கலவரங்களால், எமது பிரதேசங்களிலிருந்து வெளியேறிய அனைத்து மக்களும், தத்தம் பகுதிகளிற் குடியமர்த்தப்படுவது நியாயமானதே. இந்த விடயத்தில் தமிழர்களுக்கு அரசு உதவி வழங்க மறுத்தால், அதனை நாம் ஏற்க முடியாது"

இவ்வாறு யாழ்ப்பணத்துக்கு விஜயம் செய்திருந்த இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கப் பிரதிநிதிகள், செப்டெம்பர் 8 ஆம் திகதி பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தனர்.

இந்த இயக்கத்தின் தலைவர் திரு சாள்ஸ் அபயசேகரா உட்படப் பலர், இம் மகாநாட்டிற் கலந்து கருத்துத் தெரிவித்தனர்.

1979-ஆம் ஆண்டு இன்பம் போன்ற ஏழுபேர் கொலை செய்யப்பட்ட கலவர காலத்திலும், யாழ். நூலகம் மற்றும் எரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும் "பயங்கரமான நாட்கள்" என்ற தலைப்பில் மும்மொழிகளிலும் நூல்களை வெளியிட்டு, உண்மை நிலையைத் தென்பகுதி மக்களுக்கும் எடுத்துரைத்தோம். இலங்கை அரசும், தமிழ்ப் போராளிகளும் இணக்கம் காணப்பட முடியாத சூழ்நிலையில், மூன்றாவதுசக்தி தேவைப்பட்டது, இதனால் இந்தியப் படை வந்தது. தமிழர்களுக்கு இதனாற் பாதுகாப்பு ஏற்பட்டுள்ளதென எண்ணுகிறோம்.

இளைஞர்களின் போராட்டமே ஒப்பந்தம் ஒன்று ஏற்படக் காரணமாகியது. இதனை அரசு அமுல்படுத்தத் தவறின், அதனை நாம் எதிர்ப்போம்.

இவ்வாறு மேற்படி இயக்கத் தலைவர் திரு. சாள்ஸ் அபயசேகரா தெரிவித்தார்.

## அமெரிக்க விஜயம்

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் அமெரிக்காவில் 10 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுகிறார் அந்நாட்டுக்குத் திருத்தந்தை மேற் கொள்ளும் 2 வது சுற்றுப்பயணம் இது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாக அங்கே சென்றபோது தாம் போகாத மாநிலங்களுக்கு இம்முறை திருத்தந்தை செல்கிறார்.

"தொண்டாற்றும் திருப்பணியில் ஒருமைப்பாடு" என்பது திருத்தந்தையின் அமெரிக்கப் பயணத்திற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கும் மையக் கருத்து. தன்னலநோக்கம்சிறிதுமில்லாமல் இயேசு கிறிஸ்துவின் தொண்டர்கள், இவ்வுலகிற்குத் தொண்டாற்றும் வழி வகைகளை ஆராயத் தனது பயணமும், அதற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கும் மையக் கருத்தும் வழி வகை செய்யும் எனத் தாம் உறுதியாய் நம்புவதாக அமெரிக்க மக்களுக்குத் திருத்தந்தை சிறப்புச் செய்தி வழங்கியிருக்கிறார்.

## மேற்கு ஜேர்மன் உதவி

மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த சமூக நல நிறுவனமாகிய கிறிஸ்தோபெல் பிளின்டன் மிஷன், தமிழ் நாடு திருச்சி மாவட்டத்திலுள்ள, வரட்சியால் பாதிப்புற்ற ஏழை மக்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்த முன் வந்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் ரூபா பத்தாயிரமும், ஆந்திராவில் மற்றொரு பத்தாயிரமும் நீர் விநியோகத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந் நிறுவனத்தின் பிராந்தியப் பிரதிநிதியாகிய திரு ஞானதுரை மைக்கல் மன்னார்புரம் விழிப் புலனிழந்தோர் புனர் வாழ்வு நிலையத்தின் 12 வது ஆண்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையில், 60 கிராமங்களுக்குக் குழாய்க் கிணறுகளும் கைப்பம்புகளும் கிடைக்குமென்று குறிப்பிட்டார்.

## சமாதான உடன்படிக்கை புதிய விடிவெள்ளி

இராஜகிரிய மக்களின் நன்மை கருதி ஆகஸ்டு 30 ஆம் திகதி தமிழ்க் கிறிஸ்தவ சங்கம் என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

இது, பெயரால் இராஜகிரிய தமிழ்க் கிறிஸ்தவ சங்கமாக உருவாக்கப்பட்டாலும், இதன் நோக்கம், குறிக்கோள் இராஜகிரிய பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமய பேதம், மொழிபேதம் பாராட்டாமற் பொதுவான இலட்சியத்தோடு இயங்கும் என்று சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பூ. சந்தானம் குறிப்பிட்டார்.

மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இராஜகிரிய இருதய ஆண்டவர் ஆலய ஒன்றுகூடல் மண்டபத்தில் 30-8-87 ஞாயிறு முற்பகல் திரு. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த நான்கு ஆண்டுகள் தமிழ்ப்பேசும் மக்களுக்கு ஓர் இருண்டகாலமாக இருந்து — கடந்த மாதம் எமது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் மேற்கொண்ட சமாதான உடன்படிக்கை தமிழ்ப்பேசும் மக்களுக்கு, இருளை அகற்றவந்த புதிய விடிவெள்ளியாக, இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் குறிப்பாகக், கிறிஸ்தவ மக்களும் மேற்கொண்ட சமாதானப் பிரார்த்தனை ஒரு நல்ல விடிவை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற் பங்குத் தந்தை அருள்திரு புறூனோ டானியல் அடிகளாரும், அருட் செல்வி. பெனடிக்ரா அவர்களும், திருவாளர்கள் ஜெயசீலன், ஜேசுதாசன், ஞானப்பிரகாசம், ஜோர்ஜ் ஆகியோரும் உரையாற்றினர்.

## உணர்ச்சி மிகுந்த பத்தியா? வாழச்செய்யும் பத்தியா?

கன்னிமரியாளின் பிறந்த தின விழாவும் யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பெரு விழாவும் புரட்டாதித் திங்கள் 8ஆம் நாள் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

ஆலய விழாவாக மட்டும் அன்றி, அன்னைக்கு அவள் புதல்வர்கள் செலுத்தும் நன்றிப் பெருவிழாவாகவும் அமைந்திருந்தது. யாரேனும் சற்றேனும் எதிர்பாராத விதமாக நமக்கும் நமது நாட்டுக்கும் கிடைத்த சமாதான சுக வாழ்வு அன்னையவள் நமக்களித்திட்ட அருட்கொடையே என சமாதானத்தின் விண்ணரசிக்கு விழா எடுக்கப்பட்டது.

விழாத்திருப் பலியானது இளைப்பாறிய திருமலை-மட்டு நகர்ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அருளுரைகள் வழங்கி மக்களை வழிநடத்திய அருட் குரவர் அருட்திரு செபஸ்ரியன் அடிகளார் மறையுரை வழங்கினார். இவர் தமதுரையில், "நமது பக்தி வெறும் உணர்ச்சி மிகுந்த பக்தியாக அல்லாது உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவரின் உண்மைகளை எமதுவாழ்வில் வாழச்செய்யும் பக்தியாக அமையவேண்டும், திருவிழாக்கள் நவநாட்களுடனும் ஆடம்பரங்களுடனும் முடிவடைந்துவிடும் ஒன்றல்ல. அவை நமது வாழ்வை மாற்றி இறைவனுக்கு உகந்ததாக மாற்ற வேண்டும். அன்றேல் அவை அர்த்தமற்றவையாகிவிடும்" என்று கூறினார்.

வனிதா P

## மறைத் தலைவர்களின் சமாதான வேண்டுகோள்

ஷில்லாங் ஜூலை 20

மேகாலய மாநிலத்திலுள்ள ஷில்லாங் பேராயர் இல்லத்தில் கூடிய 30 கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் சகல பகுதி மக்களுக்கும் ஷில்லாங் நகரில் மீண்டும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்ட ஒருமித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஷில்லாங்கில் ஒரு மாதமாக நடைபெறும் குழப்பங்களினால் ஆயிரக்கணக்கான மக்கள் நகரத்திலுள்ள தமது வீடுகளிலிருந்து ஓடி அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

திருச்சபைகளின் தலைவர்கள் சகல விசுவாசிகளுக்கும், விசேடமாக இளைஞர்களுக்குச் சமாதானத்தின் கருவிகளாக விளங்கும்படி அறிவுரை கூறியுள்ளனர்.

வை. எம். சி. ஏயும் கிறிஸ்தவத் தலைவர்களும் ஒன்றித்து உழைத்து, நல்லெண்ணத் தூதுக்கள், நோயாளருக்கு அமைதி, நம்பிக்கையும் பரஸ்பர உறவையும் வளர்த்தல், வதந்திகளைத் தடுத்தல், இளைஞர் தலைவர்களோடு உறவாடுதல் இவை போன்ற நல்ல நல்ல திட்டங்களை வலியுறுத்தியுள்ளனர்.

அண்மைக்கால வன்செயல்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு உணவு வைத்திய வசதி போன்றவற்றை உதவத் திருச்சபை முன்வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# தாய்மாருக்கான கருத்தரங்கு

சென்ற ஆவணி 27ஆம் திகதி எமது பங்குத் தந்தையின் அழைப்பின் பேரில், திரு. யோசப்பாலா அவர்களின் ஒழுங்கின்மீது, பாஷையூர்ப் பங்கு மண்டபத்தில் தாய்மாருக்கான கருத்தரங்கு ஒன்று கூட்டப்பட்டது. ஏறக்குறைய 100 தாய்மார்களுக்கு மேற் பங்குபற்றிய இந்த ஒன்றுகூடலுக்கு எம்மூர்ச் சட்டத்தரணி T. M. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். இக்கருத்தரங்கிற் பங்குபற்றிய தாய்மாரில் ஒருவர் என்ற வகையில் இதன் பலாபலன்களை எழுத்தில் வடிக்க விழைகின்றேன்.

முதலாவதாக வின்சன் டீ போல் சபைத் தலைவராகிய திரு. L. B. பிலிப் அவர்கள் சேமிப்பு என்ற தலைப்பின்கீழ் ஆற்றிய உரையானது நாம் வாழும் வாழ்க்கைக்கு ஓர் எச்சரிக்கை விளக்காகவே தென்பட்டது. நடைமுறை வாழ்க்கையிற் சேமிப்பு என்பது அறிவுபூர்வமாக அமைவது வாழ்க்கையின் குறைபாடுகளைத் தவிர்க்கும் ஏதுவாக அமையும். ஆண்களைவிட, பெண்களே, தாய்மாரே சேமிப்பின் காரண கர்த்தாக்களாக விளங்கவேண்டும் என்பதற்குப் பல எடுத்துக் காட்டுக்களை உரைத்துச் சேமிப்பின் எதிரியான ஆடம்பர வழிகளாவது இக்காலத்துக்கு, இப்பிரதேசத்துக்கு அநாவசியமானது என்பதையும் விளக்கினார். இறுதியாக, கொள்கை அளவில் தாய்மார்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தினார்.

பின்னர், பேச எழுந்த எழுத்தாளர் செம்பியன் செல்வன் பேச்சுப் பூராவும் கலகலப்புப் பரவி நின்றமை மகிழ்ச்சிக்குரியது. ஒருவன் குழந்தையாயிருந்து முதியவனாகும்வரை, தாயை மையப்படுத்தியே வளர்வதால் தாயானவள் தனி உணர்வு மிக்கவளாய், பிள்ளைகளின் உளவளர்ச்சியில் ஈடுபாடுள்ளவளாய் விளங்க வேண்டும் என்றும், இக்காலத் தாய்மார் பாசநேசம் மிகுந்தவர்களாக மட்டுமன்றி, சிந்திக்கத் தெரிந்த தாய்மாராகத் திகழவேண்டும் என்றும் எடுத்துரைத்தார். தமிழ் இளவயதினர் அரசியல் அகதிகளாக வெளிநாட்டுக்குப் படையெடுப்பதால் அவர்களின் வருங்காலத்திற்கு ஏற்படும் அவல நிலைமைகள், அந்நிய நாட்டு மோகத்தால் ஏற்படும் கலாசாரச் சிதைவுகள் பற்றியும் இவற்றினால் உருவாகும் எதிர்கால நோக்கின் தகைமைகள் பற்றியும் தாய்மார் உணரத்தலைப்பட வேண்டும். நாம் அன்றாடம் சாதாரணமாகப் பாவிக்கும் தவிடு நீக்கிய அரிசியின் சத்தின்மை, புளி, மிளகாய், உப்பு இவற்றின் தாராள பாவிப்புக்கள் நம் உடலில் உண்டாக்கும் பாதிப்புக்கள், இவைகளைத் தவிர்த்து உணவின் தரங்கள் கெடாதவாறு சக்தியை அளிக்கக்கூடிய தவிடு நீக்காத அரிசி வகைகள், இலைக்கஞ்சி, புரத உணவான சோயாவின் பாவனைகள் பற்றியும் எடுத்தியம்பினார். கூடிய அளவுக்கு, தகரத்திலடைத்து வரும் உணவுப் பொருள்களை நாம் தவிர்த்து நம் நாட்டுப் புராதன உணவு வகைகள் (ஒடியல் மா, மரவள்ளி) மூலம் சக்தியை விருத்தியாக்கலாம் என்றார். நம் வீடுகளில் தேவையற்ற ஆடம்பர அலங்காரங்களை விட்டு எளிமை நோக்கான வெளிப்பாடுகள் பற்றியும் நாம் வியப்புற விளக்கினார்.

உரைகளின் பின்னர் சிறிது நேரம் கலந்துரையாடல்கள், விவாதங்கள், கேள்வி-பதில்கள் ஆகியவைகள் நடைபெற்றன. ஈற்றில் தாய்மார் சார்பில் திருமதி யூலியானா பிறின்ஸ் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது.

திருமதி. பி. பிரான்சிஸ்
பாஷையூர்




செப்டம்பர் 14:

திருச்சிலுவையின் மகிமை:

614 ஆம் ஆண்டு பெர்சியா தேசத்து அரசன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, தேவாலயங்களைக் கொள்ளையடித்து, ஜெருசலேமில் இருந்த திருச்சிலுவையையும் எடுத்துச்சென்றான். கொன்ஸ்தாந்தி நோபிளின் அரசனான ஹெராக்கிளியஸ் 627ஆம் ஆண்டு பெர்சியா தேசத்தின்மீது படையெடுத்து திருச்சிலுவை மரத்தை மக்களின் வணக்கத்துக்குப் பிரசன்னப்படுத்தி வந்தார். இந்தப் பழக்கத்திலிருந்து தோன்றியது இன்றைய திருநாள்.

செப்டம்பர் 16:

பாப்பு புனித கொர்னேலியுஸ், ஆயர் புனித சிப்பிரியான்

251ஆம் ஆண்டிற் பாப்பரசராகத்தெரியப்பட்ட கொர்னேலியுஸ், வேதகலாபனை காலத்தில், தவறியவிசுவாசிகளைத் தவநெறிக்கு அனுமதிக்கலாகாது, அவர்களுக்கு மன்னிப்பு அளிக்க திருச்சபைக்கு அதிகாரம் இல்லை என்று வாதாடிய நோலாசியன் பிரிவினரை எதிர்த்துப் போராடினார். பின்னர் சிவிட்டா லெக்சியாவுக்கு நாடுகடத்தப்பட்டு கி. பி. 253ஆம் ஆண்டிற் காலமானார்.

கிறிஸ்தவரல்லாதார் குடும்பத்திற் கார்த்தேஜ் நகரில் ஏறத்தாழ 210ஆம் ஆண்டில் சிப்ரியன் பிறந்தார். விசுவாசத்திற்கு மனந்திரும்பி, குருவாகி, 249ஆம் ஆண்டில் ஆயரானார். டீசியன் காலத்தில் ஏற்பட்ட வேதகலகத்தில் 258ஆம் ஆண்டு கார்த்தேஜிலேயே வேதசாட்சியாக மரித்தார். "திருச்சபையை உன் தாயாக ஏற்றுக் கொள்ளாவிடில் இறைவனைத் தந்தையென நீ தெரிந்து கொள்ள முடியாது என்ற இவரின் கருத்தினை நாமும் பின்பற்றி வாழ முயலுவோமாக.

செப்டம்பர் 17:

புனித றொபேட் பெல்லார்மின்

இத்தாலி நாட்டில் டஸ்கனிப் பகுதியில் மோன்டே புல்சானோ நகரில் 1542ஆம் ஆண்டிற் பிறந்தார். 18ஆவது வயதில் யேசுசபையிற் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்கும் பொருட்டுத் தன்னால் இயன்றவரை பாடுபட்டார். இவரது சேவையின் நிமித்தம் கருதினல் ஆனார். அன்றைய காலத்தில் ஏற்பட்ட ஐயப்பாடுகள் பலவற்றைத் தெளிவுபடுத்தினார். உரோமையில் 1621ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் காலமானார். திருச்சபைக்காக அயராது உழைத்த புனிதரின் வழியை நாமும் செயற்படுத்த முயலுவோமாக.

செப்டம்பர் 19

புனித ஜனவாரியுஸ்

பெனவெந்தம் நகரின் ஆயராக நியமனம் பெற்ற காலத்தில் தியோக்கிலிசியான் கிறிஸ்தவர்களை அடக்கி ஒடுக்கி வந்தான். இதை அறிந்து, அதற்கெதிராகப் போராடினார்.

சகோ. றொபேட்

## திருமறைநூல் வினாவிடைப் போட்டி இல 1

**பரிசு பெறுபவர்:**

**1ஆம் பரிசு**
அலெக்சாண்டர் கலாசெலஸ் மேரி
நப். 16, பற்றிமா அவனியூ
மிருசுவில்

**2ஆம் பரிசு**
செ. ஜெயச்சித்திரா
இரணைதீவு
பூநகரி

**3ஆம் பரிசு**
ஜே. லூசியான் மரியதாசன்
வைத். சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்

பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி.

இவண்,
யா / மறைக்கல்வி நிலைய இயக்குநர்

# தேனருவி

### ஆண்டின் 25 ஆம் ஞாயிறு
### 20-09-87

இசை. 55: 6-9   பிலி. 1: 20—24   மத். 20: 1—16

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறு ஒன்று நினைக்கும்" என்பார்கள். நாம் நினைப்பது போலத் தெய்வம் இருப்பது இல்லை. காரணம் எமது எண்ணங்களில், செயற்பாடுகளில் தன்னலம், பொறாமை, பேராசை, ஆணவம் கலந்துள்ளன. ஆனால், இறைவனோ நன்மையே உருவானவர். தீமையை விரும்பாதவர். "உங்கள் வழிகளை விட நம்முடைய வழிகளும், உங்கள் எண்ணங்களை விட நம்முடைய எண்ணங்களும் விண்ணைப் போல மிக உயர்ந்தவை." (இசை. 55:9)

இந்த உலகம், மக்கள், செல்வங்கள் அனைத்தும் ஆண்டவனுக்கே சொந்தம். அவர்தம் விருப்பப்படி அனைத்தையும் பங்கிட்டுக் கொடுப்பது அவரது தாராள சிந்தையைப் பொறுத்தது. அவரது தாராள மனம் என்றும் குறைவு பட்டதுமன்று. தமது பிள்ளைகளான மக்களில் யார் யாருக்கு என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், நாம் எம்முடைய சின்ன மனத்திற்கேற்ப, குறுகிய பார்வையுடன், குறுகிய வட்டத்துள் இருந்து இறைவனோடு பேரம் பேசுவதுண்டு. நமக்கு இறைவன் என்ன செய்தார் மற்றவனுக்கு என்ன செய்கின்றார் என்று கடவுளையே எடை போடுகின்றோம்.

எனக்கு உரியதைத் தக்கபடி கொடுத்து என்னை எத்தனையோ நன்மைகளால் அவர் நிரப்பிடினும், அடுத்தவருக்கு அதிகமாகக் கொடுத்துவிடக் கூடாது என விரும்புகின்றோம். எங்கள் மனத்திருப்தி எப்போதும் அயலவருடைய அல்லது அண்டை வீட்டுக்காரருடைய சொத்துடன், செல்வாக்குடன், விளைச்சல் வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதிலேயே தங்கியிருக்கின்றது.

திராட்சைத் தோட்டத்துத் தலைவனும் வேலையாள்களும் என்ற உவமையில் இயேசு இப்பிரச்சனையை விளங்க வைக்கின்றார். கூலி பேசியபடி ஒரு வெள்ளிக்காசு பெற்ற சிலர், தம்மிலும் பார்க்க இன்னும் சிலர் குறைவான நேரம் வேலை செய்து சமமான அளவு கூலி பெற்றுவிட்டார்கள் எனப் பொறாமைப்படுகின்றார்கள். சில பக்தர்களும் இப்படித்தான். இறைவன் தமக்கு அநீதி செய்துவிட்டார் என்று முறையிடவில்லை. மாறாக, அவர் நல்லவராய் இருக்கிறார், தாராளமாய் வாரி வழங்குகின்றார் என்று பொறாமை கொண்டு ஆண்டவரிடம் பேரம் பேசுகின்றார்கள்.

உண்மையில், பிரச்சனை ஆண்டவரோடு இல்லை. எம்மோடு தான் பிரச்சனையுண்டு. சிக்கல் எம்மனத்திற்குள்ளேயே. ஆகையால், மாற்றம் அடைய வேண்டியது எமது மனநிலையே.

அடுத்தவனின் வீழ்ச்சியில் மகிழ்வடையும் சுய நலம் களையப்பட்டு, அவர்கள் வளமுடன் வாழ வாழ்த்தவேண்டும். அவர்கள் வளர்ச்சியில் திருப்திகாண வேண்டுமாயின், எம் எண்ணங்கள் இறைவனுடைய தாராள சிந்தை கொண்ட எண்ணங்களாக வேண்டும். இறைவனோடு எமக்குள்ள பக்தி கலப்படமற்ற தூய பக்தியாக வளர வேண்டும்.

சுவாமி ஜீவா போல், அ. ம. தி.

## வாசகர் கருத்து

வாசகர்களாற் காவலனிற் பிரசுரிப்பதற்கு எழுதப்படும் ஆக்கங்களுக்குத் திருத்தங்களையும், உரிய தலைப்புக்களையும், ஏற்ற வகையில் மாற்றி அமைத்து, காவலனிற் பிரசுரிப்பதன் மூலம் எமது சிந்தனைக்குத் தெளிவை மேன்மேலும் ஊட்டி கிறிஸ்தவ கோட்பாடுகட்கு அமைவான சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள், பங்குச் செய்திகள், ஆகியவற்றைத் தொடர்ந்தும் எழுதுவதற்கு வேண்டிய உற்சாகத்தினையும், தெம்பினையும் வளர்த்துவரும் காவலன் ஆசிரியருக்கு என் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. அ. இம்மானுவேல்.
ஊறணி, காங்கேசன்துறை

## மரியாளின் ஆண்டு 1987—1988

### 20-09-87 முகமாலை அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத்தல விழா



தன்னைத் தானே எனக்காகத்
தந்தே அன்புப் பலியாகி
என்னை மீட்ட இறை மகனை
ஈன்ற ஞானத் தலை மகளே
அன்னை வேளாங் கண்ணி யென
அடியார் ஏத்தும் திருமகளே
உன்னைப் பிரிந்தால் என் வாழ்வு
உதிர்ந்த சருகாய் விடும் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

## எம்கருத்து

### திரும்பிப் பார்க்கிறேன்

''பாதுகாவலன்'' பத்திரிகை ஆசிரியராகப் பணியைப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவாகின்றது. எனவே, கடந்தகாலத்தைப் பின்நோக்கிப் பார்க்கின்றேன்.

முதற்கண், எனக்கு எழுத்தறிவித்த இறைவனுக்கு வணக்கமும் நன்றியும் தெரிவிப்பது எனது தலையாய கடமையாகும்.

பத்திரிகையில், கடந்த ஓராண்டு முழுவதும் வெளிவந்த ஆக்கங்கள் அனைத்தும், அன்புப்பணி புரிந்த இறை ஊழியர்களின் படைப்புக்கள். திரைமறைவில் அரும்பணி ஆற்றிநிற்பவர்கள் ஏராளம். ஆக்கங்களைப் படைத்துதவிய அனைவருக்கும் வாசக அன்பர்கள் சார்பில் உளமார்ந்த நன்றி.

பத்திரிகையைப் பொறுப்பேற்ற நாள்முதல், இடையீடின்றி, ஆசிரியர் தலையங்கத்தை (எம்கருத்து) அடியேன் எனது சொந்தப் படைப்பாக வெளியிட முடிந்தது. குறையோ, நிறைவோ இப்பகுதியில் எழுதிய அத்தனை வார்த்தைகளும் எனது சொந்தப் படைப்புக்கள். அவற்றில் நிறைவுள்ளவற்றை எழுத, மனவலிமையையும், ஆதரவையும் தந்த இறைவனுக்கு எத்துணை நன்றி சொல்லினும் தீராது.

எழுத்தாளரின் பணியைவிட, பத்திரிகையை வெளியிடுவதில், தங்களையே முற்றும் முழுதாக அர்ப்பணித்தவர்கள் எமது அச்சக ஊழியர்களே. ஊதியத்துக்குமதிகமாக ஊழியம் புரிந்து உதவும் எம்மவர்களை ஊக்குவிக்க வழிகளைத் தேடிநிற்கின்றோம்.

எமது பத்திரிகை வினியோகம் 5000 என பலகாலமாகப் பல ஏடுகளிற் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றது. ஒரு காலத்தில், முன்னைய ஆயர் 5000 பிரதிகளை அச்சிட்டு எல்லா இடங்களுக்கும் அனுப்பியதாகக் கூறுகிறார்கள். சென்ற ஆண்டு இதே காலப்பகுதியில் 2550 பிரதிகள் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டன.

கடந்த ஓராண்டு முழுவதும் நாம் பத்திரிகை வினியோகத்தை ஊக்குவிக்க எம்மாலான முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டோம். நாம் முயற்சித்ததற்கேற்ற பலன் கிடைத்ததா? ஆம், பத்திரிகை வினியோகம் 100% அதிகரித்துள்ளது. ஆனால், 90% கிறிஸ்தவர்கள் எமது மறைவட்டத்திலேயே பாதுகாவலன் பத்திரிகையை இன்னும் கண்ணுற் காணவில்லை.

எமது பத்திரிகை இப்போது 8 பக்கங்களில் வெளிவருகிறது. அதற்குச் செலவாகும் வெற்றுத்தாள் காகிதவிலை மட்டும் 70 சதத்திற்கும் அதிகம். அதைவிடத் தபாற்செலவு, ஊழியர் சம்பளம், மை, இயந்திரத்தேய்வு, மின்சாரச் செலவு என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு பத்திரிகை மூலம் நாம் பெறுவது = 90சதம் மட்டுமே. ஒரு பத்திரிகைக்கு மேலதிகச் செலவு = 1.75 சதம். இதைவிட, பலருடைய கொடுப்பனவுகள் நிரந்தர நிலுவைகளாக இருக்கின்றன.

வாசகர் தொகை பெருக்குவது வியாபார நோக்கமானது அன்று. மாறாக, வாசகர் தொகைப் பெருக்கம் பொருளாதார ரீதியாக எமது நட்டத்தைப் பன்மடங்காக்குகிறது.

இருந்தும், எமது முயற்சி பலருக்குப் பயன்தர வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே, வாசகர்கள் தொகைபெருக ஊக்குவிக்குமாறு மறைப்பணியாளர்களைப் பணிவோடு கேட்டு வருகிறோம்.

பத்திரிகை விலையைக் கூட்டுவதால், எமது நட்டத்தை ஈடுசெய்ய முடியும். ஆனால், வாசகர் தொகை குறைந்துவிடும். எனவே, அச்சக உழைப்பைக் கொண்டு அந்த நட்டத்தை ஈடுசெய்கிறோம். எமக்குக் கிடைத்த பாதுகாவலன் நிதி, அரையாண்டிற்கு எமக்கு ஏற்பட்ட மேலதிகச் செலவை ஈடுசெய்ய உதவியுள்ளது. தனவான்களே, தொடர்ந்தும் உதவுங்கள்.

மனமுவந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றி. இறை ஊழியத்தில், உங்கள் பணிக்காக இறைவன் நிறை ஆசியை உங்களுக்கு வழங்குவார். நன்றி. வணக்கம். தொடர்கிறோம்; தொட்டுங்கள்.

**''பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலின் பெரிது''**

# ''மீட்பரின் அன்னை''

**திருத்தந்தையின் சுற்றுமடல்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

திருவருகையை எதிர்பார்த்திருந்த காலமாகிய அந்த ''இரவில்'' மெய்யான ''உதயதாரகை'' போன்று பிரகாசித்தவளான அவளிடம், இன்றைய காலகட்டத்தில், ஒரு விசேட விதத்தில் நாம் அண்டிவர விரும்புகிறோம் என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். சூரிய உதயத்துக்குமுன் விடிவெள்ளியும் புலரிப்பொழுதும் வருவது போல, மனுக்குல வாரலாற்றில் 'நீதியின் சூரியனை'' மீட்பரின் வருகைக்குமுன், மரியாள் தனது மாசில்லாத உற்பவவேளைமுதல் முன்னோடியாக இருந்து வந்துள்ளாள்

திருச்சபை இவ்விதமாகவே அதற்கு விளக்கமளிக்க முனைந்துள்ளது. மனித அவதாரத்தின் மறைபொருள், மனுவுரு எடுத்த வார்த்தையின் அன்னையைப் பற்றிய மறைபொருளை ஊடுருவி அதைத் தெளிவாக்கத் துணைபுரிந்துள்ளார். எபேசு திருச்சங்கம் (431) இதைத் தெளிவுபடுத்துவதிலும், தீர்மானிப்பதிலும் முக்கியத்துவம் பெற்றது. ஏனெனில், அச்சங்கத்தின்போது தான் மரியாள் தேவனின் தாய் என்ற உண்மை, திருச்சபையின் விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதைக்கேட்டுக் கிறிஸ்தவர்கள் மகிழ்ந்தனர். மரியாள் இறைவனின் தாய்.

அடுத்தபடியாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மனித அவதாரம் என்னும் உண்மை திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் என்னும் மறைபொருளில் ஒருவிதத்தில் விரிவுபடுத்தப்படுகிறது. மனித அவதாரம் என்னும் உண்மையை, மனுவுரு எடுத்த வார்த்தையானவரின் அன்னையாகிய மரியாளோடு தொடர்புபடுத்தாமற் சிந்திக்கமுடியாது.

ஆயினும், இச்சிந்தனைகளில் நான் முதன்மையாகக் கவனத்திற்கொடுக்க விரும்புவது, புனித மரியாள் கிறிஸ்துவோடு தான் கொண்ட ஐக்கியத்தைப் பிரமாணிக்கமாகக் காத்து முன்னேறிச்சென்ற அந்த

## 2000 ஆம் ஆண்டிற்கு அண்மையிலுள்ள இக்கடைசி ஆண்டுகளில், வரலாற்றில் தேவதாயின் தனித்துவமான பிரசன்னத்தை வலியுறுத்த நியாயமுண்டு.

இஸ்ராயேல் மத்தியில், அவளது பிரசன்னம் இலைமறைகாயாக இருந்தபடியால் அவளது சமகால மக்களின் கண்களுக்கு அது புலப்படாமற் போயிருக்கலாம். ஆனால், மறைவான இந்த 'சீயோன் குமாரத்தியை' மனுக்குலத்தின் முழு மீட்பு வரலாற்றுத் திட்டத்துடனும் தொடர்புபடுத்திய நித்திய கடவுளின் முன்னிலையிலோ அது தெட்டத்தெளிவாகத்தோன்றியது. பரிசுத்த திரித்துவத்தின் தெய்வீகத் திட்டமே திருவெளிப்பாட்டினதும் விசுவாசத்தினதும் மையப்பொருள் என்பதைக்கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவோம். எனவே, 2000ம் ஆண்டிற்கு அண்மையிலுள்ள இக்கடைசி ஆண்டுகளில், வரலாற்றில் தேவதாயின் தனித்துவமான பிரசன்னத்தை வலியுறுத்தவேண்டிய அவசியத்திற்குத் தக்க நியாயமுண்டு என்பதை நாம் உணர்ந்துள்ளோம்

ஏனெனில், பரிசுத்த ஆவியின் வல்லமையால், இறைவனுடைய மகனும், பிதாவோடு ஒரே பொருளானவருமான யேசுக் கிறிஸ்துவைத் தனது கன்னி உதரத்திற் கருத்தரித்து உலகுக்கு அளித்தாள் ''இறைவனின் திருக்குமாரன் கன்னி மரியிடமிருந்து பிறந்து, உண்மையில் நம்முள் ஒருவரானார்'' (இ. உ. தி. 22); நம்மோடு மனிதனானார். எனவே, கிறிஸ்துவின் மறைபொருளினூடாகத் திருச்சபையினது விசுவாசத்தின் தொடுவானில்,அவரது அன்னையின் மறைபொருள் முழுமையாகப் பிரகாசிக்கிறது. மரியாள் 'இறைவனின் தாய்' என்னும் போதனை எபேசு திருச்சங்கத்திற்கும் திருச்சபைக்கும் மனித அவதாரம் பற்றிய போதனைக்கு முத்திரையிடுவதுபோன்று இருக்கின்றது. இம்மனித அவதாரத்தில் வார்த்தையானவர் தமது இயல்பைவிட்டுவிடாமல்,அதே

''விசுவாசப் பயணத்தையே'', (தி. 58) இந்தவிதத்தில் இறைவனின் அன்னையைக் கிறிஸ்துவோடும் திருச்சபையோடும் ஐக்கியப்படுத்தும் இருவிதபந்தனம் வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், இது கன்னிமரியாளின் வாழ்க்கை வரலாற்றையோ, அவளது தனிப்பட்ட விசுவாசப் பயணத்தையோ, மீட்பு மறைபொருளில் அவளுக்குரியதான சிறந்த பங்கையோ மட்டும் பொறுத்த விடயம் அன்று; அதே விசுவாசப் பயணத்திற் பங்குகொள்ளும் முழு இறைமக்களின் வரலாற்றையும் பொறுத்த விடயமாகும்.

''மரியாள் முன்னே சென்றுள்ளாள்'' என்றும், ''விசுவாசம், அன்பு, கிறிஸ்துவோடு கொண்டுள்ள நிறை ஒன்றிப்பு ஆகியவற்றால் இறையன்னை திருச்சபையின் மாதிரியாக'' விளங்குகிறாள் என்றும் திருச்சங்கம் வேறொரு பகுதியிற்

## எபேசு சங்கம் 431ஆம் ஆண்டு ''மரியாள் தேவனின் தாய்'' என்ற உண்மையை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தது.

4. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் ''கிறிஸ்துவின் மறைபொருளிலும் திருச்சபையின் மறைபொருளிலும் தேவதாய்'' என்பதுபற்றி எடுத்துக் கூறுவதன்மூலம் எம்மைத் தயார் செய்கின்றது. ''மனுவுரு எடுத்த வார்த்தையின் மறைபொருளிலேதான் மனிதனின் மறைபொருள் விளக்கம் பெறுகிறது'' எனத் திருச்சங்கம் கூறுவது (இ. உ. தி 22) உண்மையானால், இக்கோட்பாடு மனுக்குலத்தின் 'தனிச்சிறப்புவாய்ந்த குமாரத்திக்கு, கிறிஸ்துவின் அன்னை ஆகிய அந்த ஒப்பற்ற பெண்ணுக்கு,

ஆளிலேயே மனித சுபாவத்தை எடுத்துக் கொள்ளுகின்றார்.

5. கிறிஸ்துவின் மறைபொருளில் மரியாளை வெளிப்படுத்துவதன் மூலம், இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச்சபை எனும் மறைபொருளை ஆழமான விதத்தில் விளங்கிக்கொள்வதற்கு வழிகண்டு கொள்கிறது. கிறிஸ்துவின் தாய் என்ற முறையில், மரியாள், ''ஆண்டவர் தமது சொந்த உடலாக நிறுவிய'' (தி. 52) திருச்சபையோடு ஒரு விசேடமான விதத்தில் ஐக்கியப்பட்டிருக்கின்றாள். சங்கத்தின் ஏடுகளில், திருச்சபை கிறிஸ்து

குறிப்பிடும்போது (தி. 63) இதனையே வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு ''முன் செல்லுதல் ஒரு மாதிரியாக அல்லது முற்குறியாக அமைதல் என்பது, மரியாளைப் போலவே தாய், கன்னி என்னும் இருவிதப் பண்புகளையும் தன்னிலே இணைப்பதன் மூலம், தனது சொந்தப் பணியை நிறைவேற்றும் திருச்சபையின் உள்ளார்ந்த மறைபொருளைக் குறிப்பதாகும். 'திருச்சபையும் ஒரு கன்னியே, இது தன் மணமகன் தந்த விசுவாசத்தை முழுமையாகவும் தூய்மையாகவும் காக்கிறது'', ''அது ஓர் அன்னையும் ஆகின்றது. ஏனெ

## கிறிஸ்துவின் மனித அவதாரம் என்னும் உண்மையை மனுவுரு எடுத்த வார்த்தையானவரின் அன்னையாகிய மரியாளோடு தொடர்புபடுத்தாமற் சிந்திக்க முடியாது.

ஒரு விசேட விதத்திற் பொருந்த வைக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் மறைபொருளிலேதான், அவளது மறைபொருள் முற்றும் தெளிவாக் [illegible]

வின் மறையுடல் என்ற இந்த உண்மை (சின்னப்பருடைய கடிதங்களின் போதனைப்படி) இறைமகன் தூய ஆவியின் வல்லமையாற் கன்னிமரியாளிடம் பிறந்தார் என்ற உண்மைக்கு

னில், ஒரு புதிய அழிவில்லா வாழ்வுக்குப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறது. இப்பிள்ளைகள் பரிசுத்த ஆவியால் உருவானவர்கள்; இறைவனுற் பிறந்தவர்கள்'' (தி. 64). (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
18-09-87




அன்பு இளம் உள்ளங்களுக்கு,

வசந்தகாலக் கோலம் வானில் விழுந்த கோடுகளும் அல்ல; வரண்ட காலக் கீறல்களும் அல்ல. வாாழ்க்கையில் வசந்தம் வேண்டும். ஏனெனில், அதனை வரவழைக்கும் ஆற்றல் உங்களிடமே உள்ளது.

உங்களது வாழ்வின் உயர்வு,
வாழ்வின் வசிகரத்தில்,
கரங்களின் செயற்றிறனில்,
மனங்களின் ஒருங்கிசைவில்,
இதயங்களின் உணர்திறனில்,
தூங்கியுள்ளது.

அதேவேளை, உங்களை ஏமாற்ற என்று, எத்தனையோ காரணிகள் காத்திருக்கின்றன. நாணயமில்லாத நண்பர்கள், காத்திரமில்லாத கருத்துக்கள், போலியான கொள்கைகள், தெளிவற்ற இலட்சியங்கள், மாற்றங்களை மாசாக்கக் கருதுகின்ற சமுதாய சமய அமைப்புக்கள் போன்றன, மகத்துவமான மனித வாழ்வினை நிர்மூலமாக்கும் அழிவுசார் கருவிகளாகத் தொழிற்படுகின்றன.

"தெளிவற்ற இலட்சியங்களுக்காக நிகழ்கால வாழ்வை மக்கள் தியாகம் செய்யவேண்டும் என வற்புறுத்துவது தவறாகும்."

என, நவீன மெய்யியலாளர் கார்ஸ் பொப்பர் கருத்துரைக்கின்றார். உங்களது சொந்த மகிமைக்காக, குடும்பப் பெயருக்காக, ஊர்ப்புகழுக்காக ஏனையோரைத் தியாகம் செய்யும்படி வற்புறுத்தாதீர்கள். வரட்டுக் கௌரவத்தினை நிலைநாட்டுவதற்காக, மனிதர்கள் பலிக்கடாக்களாக்கப்படுவது கொடியதாகும்.

"மனித வாழ்க்கை மகிழ்வானதாக மலர, மக்கள்மீது தியாகம் திணிக்கப்படாதிருக்கட்டும்.

நல்வாழ்த்துக்களுடன்
அன்பு நெஞ்சன் வி. பி.

## மைதானம்

வாழ்க்கை ஓர் அழகான மைதானம். அஃது எனக்கு விளையாடுவதற்காகத் தரப்பட்டிருக்கிறது. ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதற்காகவன்று. அல்லது பயத்தினாற் பதுங்கி ஓடவன்று. யாராவது விளையாடட்டுமே என்ற தாழ்வு மனப்பான்மையால் ஒதுங்கவுமன்று.

நான் அதில் மகிழ்ச்சியாக விளையாடவே அது எனக்குத் தரப்பட்டுள்ளது.

என்னுடைய உடலை வருத்துவதன் மூலமாகத்தான் அந்த விளையாட்டின் மகிழ்ச்சியை நான் அனுபவிக்க முடியுமென்றால், அதனைச் செய்யத்தான் வேண்டும்.

சிற்சில சமயோசிதமான வழி முறைகளைக் கையாண்டுதான் அதில் வெற்றி பெற முடியுமென்றால் அதனை உபயோகிக்கத்தான் வேண்டும்.

சிற்சில பயங்கரமான எதிர்ப்புகளை எதிர் நோக்கித்தான் நான் வெற்றி பெறக் கூடுமானால், அவைகளை எதிர்நோக்கித்தான் ஆக வேண்டும்.

ஏனெனில், வெற்றியை அதன் மூலமாகத்தான் பெறலாம். ஜனநாயக ஆட்சி ஒழுங்குற அமைய, எதிர்க்கட்சி எவ்வாறு முக்கியமோ அது போல்தான், விளையாட்டிற்கும் எதிரணி இருந்தால்தான் அது சுவாரஸ்யமாக அமையும்.

எதிரணி இல்லாமலும் விளையாடலாம், ஆனால், அதில் எவ்வித சுவாரஸ்யமும் இருக்காது.

ஆகவே, விளையாட்டில் சுவாரஸ்யமும் மகிழ்ச்சியும் இருக்க வேண்டுமானால் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். அவ்வாறு மோதும் வேளை உணர்ச்சிகளை மோதவிடக் கூடாது. ப் கு த்தறிவையே மோத விடவேண்டும்.

மைதானம் எங்களுக்குச் சொற்பகாலக் குத்தகைக்கே விடப்பட்டிருக்கிறது. அந்தச் சொற்ப காலத்தில் எவ்வளவு தூரம் விளையாடினோம் எவ்வளவு வெற்றிகளைப் பெற்றோம் என்பது தான் முக்கியமானது.மாறாக, மைதானத்தில் இருந்தோம், மற்றவர்கள் விளையாடியதைப் பார்த்தோம் என்பதன்று. நாம் விளையாடுவோம் வெற்றிகளைக் குவிப்போம்.

பேபி. கொழும்பு.




**அணைகடந்த வெள்ளம் திரும்பிவரமாட்டாது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**

உலகம் நாள்தோறும் மாறிக்கொண்டுவரப் பெற்றோர்களும் பிள்ளைகளும் உலகத்தோடு சேர்ந்து திசை திரும்பிக்கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இன்றைய பெற்றோர்கள், தம்பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய அளவில் இடம் கொடுத்து அவர்கள் கேட்கும் இடமெல்லாம் சுதந்திரமாக விட்டுவிடுகிறார்கள். அப்படி விடுவதற்குப் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது கொண்டுள்ள முழு நம்பிக்கைதான் காரணம் எனலாம். ஆனால், பிள்ளைகளோ, பெற்றோர் தம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்தவர்களாகப் பெற்றோர் எமக்கு யார் என்ற அவநம்பிக்கை பூண்டவர்களாகச் செயலாற்றி வருகிறார்கள். அச்செயலின் இறுதிக்கட்டம் என்னவாகிறது. பிள்ளை தன்னையே ஏமாற்றி, தன் இஷ்டப்படி தனது வாழ்க்கையைத் தவறான வழியில் திசைதிருப்பி வைக்கிறது. இறுதியாகப் பெற்றோரின் நம்பிக்கையை இழந்தவனாக, ஊரவரின் தீய பேச்சுக்களுக்கும், கேலியான வேடிக்கைத் தனங்களுக்கும் தன்னை அடிமையாக்கி விடுகிறான். பிள்ளை பெற்றோரின் பாசத்தை இழக்க, பெற்றோர் சிலர் பிள்ளையின் மேல் வெறுப்பு உண்டாகி அவன் எனக்குப் பிள்ளையா? என்ற கேள்வியையும் எழுப்பிவிடுகிறார்கள்.

பிள்ளையின் செயல்கள் ஊரறியாவண்ணம் இருக்கின்றபோதிலும் பெற்றோர்களே தம் பிள்ளைகளின் மானத்தை உலகறிய விற்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட பெற்றோர்களை நாம் இன்று காண்கின்றோம். இறுதியில், பிள்ளையின் மனநிலை பெற்றோரின் பாசமின்றி, தளர்ந்த மனத்தோடு தனது வாழ்வைச் சிதறடிக்க வைக்கிறது. நான் இனி வாழ்வதிற் பயனில்லை என எண்ணி, தற்கொலை செய்யவும் முற்படுகின்றனர் சிலர். அணைகடந்த வெள்ளம் மீண்டும் அணைக்குள் நுழைய முடியாதிருக்கின்றது. அதேபோல் பிள்ளைகள் பெற்றோரின் அன்புப் பராமரிப்பின் பாசத்துக்குள் திரும்ப நுழைய முடியாது தவிக்கின்றனர்.

எனவே, பெற்றோர்கள் தமது அன்பின் பாசத்தைப் பிள்ளைகள் மேல் அள்ளிச் சொரியும்போது. பிள்ளைகள் பெற்றோருக்குப் பிரமாணிக்கமாய், பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக, பெற்றோரின் நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்காதவர்களாக வாழவேண்டும்.

குடும்பமே ஒரு குட்டித் திருச்சபையாக விளங்கட்டும்.

செல்வி மேரிமலர் மரியாம்பிள்ளை
இளவாலை

இப்பகுதியை வாரந்தவறாமற் படித்து அதிலுள்ள ஆழமான கருத்துக்களையும், பிள்ளை வளர்ப்புப்பற்றிய அறிவுரைகளையும் வாழ்க்கையிற் கடைப்பிடிக்க முயலும் இளந் தாய்மார்களில் நானும் ஒருத்தி. எம் போன்ற, அனுபவம் குறைந்த இளம் தாய்மார்களுக்கு இதை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறேன். இது போன்ற பல ஆக்கபூர்வமான பகுதிகளை எமக்களித்து, எமது சிந்தனையையும் வாழ்க்கையையும் தட்டியெழுப்பி வரும். பாதுகாவலன் ஆசிரியருக்கும் திருமண வாழ்க்கையில் தம்பதியினரை வெற்றி பெறச் சந்தர்ப்பமளிக்கும் 'குடும்பம் ஒரு கதம்பம்' பகுதி ஆசிரியருக்கும் எமது ஆசியும் நன்றியும் உரித்தாகுக.

எ. அனற்
சில்லாலை

பாராட்டுக்களுக்கு நன்றி. [illegible] கூறுகிற போதும் ஏற்றுக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் தயங்க மாட்டோம். பிரசுரிக்கப்பட்ட கடிதங்களில் இருந்து புரிந்திருக்கும்.

"மணமான வாழ்விற்கு மணியான யோசனைகள்" – என்ற ஒரு புதிய பகுதியை இங்கே புகுத்துகிறோம். கண்ணதாசனின் கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருவார் சகோதரி சோபியா.

இது போன்று, இப் பகுதிக்கும் யோசனைகளைத் தொகுத்தும் எழுதியும் அனுப்புங்கள்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-8

குருசுமுத்தண்ணை. எங்காலை அடைக்கலம் வாறாய்? வழியிலை ஒருத்தன் விழுந்து கிடக்கிறான் தெரியல்லையே?

அடைக்கலம்; நான் கோயிலால வாறன், அதில தொட்டு ஏன் சும்மா வம்பில மாட்டுவான்.

குருசு.; எட தம்பி அவனையும் ஒருக்காப்பாத்துத் தூக்கிவிட்டா என்ன? இதத்தானே அயலவனையும் நேசி எண்டு சுவாமி சொன்னவர். கோவிலில ஒண்டும் வாழ்க்கையில ஒண்டும் செய்யிற வெளிவேடக்காரனாய் இராதே தம்பி.

யோகா

# "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

இறவாத புகழுடையனவும் மக்கள் வாழ்வை உயர்த்துவனவுமான நூல்களை உலகிற்கு ஆக்கித் தந்த பெருமை புலவர்களையே சாரும். அத்தகைய புலவர் வரிசையிலே இடம் பெற்று விட்ட புலவர்களுள் ஒருவரே" கணியன் பூங்குன்றனார்" ஆவார். இவர்களது நூல்கள் தற்பொழுது 20 ஆம் நூற்றாண்டிலே அணு உலகுக்குள் புகுந்து விடாது பிரகாசிப்பதே தமிழ் மக்களின் பெருமையாகும். கணியன் ஆக்கித் தந்த "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொடர் மிகவும் கருத்துப் பொதிந்த தொன்றாகக் காணப்படுகிறது.

இத்தகையதோர் இலட்சியத்தை உலகில் வாழும் ஒவ்வொரு பிரசையும் வாழ்வின் இலட்சியமாக கொள்ள வேண்டும். எல்லா ஊர் மக்களும் எனது சுற்றத்தார், எனது அயலவர் என்ற நோக்கோடு வாழும் போது மக்களிடையே போட்டிகள், பொறாமைகள், பூசல்கள் என்பன வளர மாட்டா. தொன்மையிலே வில்லேந்தி, அண்மையிலே விண்வெளியை அடைந்து விட்ட மனிதன், கடவுள் இருக்கின்றானா? எனக் கேட்கும் அளவுக்கு வந்து விட்ட இவ் உலகத்தின் போக்கில், மனிதனை மதிப்பானா? என்பது ஒரு கேள்விக் குறியாகத்தான் அமைந்து விட்டது. இருப்பினும் தற்போதைய கால கட்டத்தை நோக்கும் போது மனிதனை மனிதன் மதிக்க மாட்டான் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகி விட்டது.

இன்று உலகில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்றும், அணிசேரா நாடுகளின் ஸ்தாபனம் என்றும், உலகில் சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் என்று இவ் அமைப்புகள் உருவாகியதே இந்த நூற்றாண்டில் அடைந்த [illegible] எனலாம். மூன்றும் உலகப் போரை உலகிலே ஆரம்பிக்க விடக் கூடாது என்ற நோக்கத்தோடு இவ் அமைப்புக்கள் செயற்பட்டாலும் அவற்றின் செயற்பாடுகளை இன்று காண முடியவில்லை. ஏன்? இன்று அமெரிக்காவும் அதன் சார்பான நாடுகளும், ரஷ்யாவும் அதன் சார்பான நாடுகளும், என்று, யார் அணு ஆயுதத்தைப் பெருமளவு உற்பத்தி செய்வது என்ற போட்டி உலகக் கண்ணோட்டத்தில் இன்று காணக் கூடியதாக உள்ளது. இதற்கிடையில் உலகில் வல்லரசுகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான அணு ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தை நடைபெறுவது வெறும் போலி வேடமாகவே காணப்படுகிறது. இன்றைய உலக ஓட்டத்திலே உலக அரசியல் அவதானிகளையும், அறிஞர்களையும் [illegible] வளை குடாப் போரில் என்ன நடக்கிறது? அமெரிக்காவானது ஈரானுக்கும், ஈராக்கிற்கும் அயுதங்களை மறை முகமாக விற்றுப் போரை வளர்த்து அந் நாடுகளுக்கு வரும் எண்ணெய்ப் பொருளாதாரத்தைத் தன் பக்கம் கவர்ந்து, அரசியல் இலாபம் தேட முயற்சி செய்கிறது. V. A. ஜெரோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

**ஞான இலக்கிய நூல்கள் (ஞானாகமங்கள்)**

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

வேதாகமத்திலே யோபு, பழமொழி, சங்கத்திருவுரை, சிராக், ஞானாகமம், உன்னத சங்கீதம் போன்றன ஞான இலக்கிய நூல்களாகும். இவை, அனேகமாக உரை நடையாகவும், இசை அமைப்புடையனவாகவும் இருக்கின்றன. இவற்றிற் காணப்படும் கற்பித்தல் முறை, சங்கீதங்கள், தொபியாஸ், பாரூக் போன்ற நூல்களிலும் ஓரளவிற்கு இருப்பதால் அவற்றையும் ஓரளவிற்கு ஞான இலக்கிய நூல்களாகக் கருதலாம்.

பண்டைக் காலத்தில், கீழைத் தேசங்களில் இந்த ஞான இலக்கியமானது பழமொழிகள், புனை கதைகள், கவிதைகள் போன்ற வடிவங்களிலே பொலிவுற்றன. இந்த இலக்கியத்தை வளர்த்தவர்கள் ஞானிகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள், ஞானமானது வரலாறு, தேசியவாதம், சமயம் போன்றவற்றைக் கடந்து, மனித வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு நடைமுறையான தீர்வுகளைக் காண்பதையே அடிப்படை நோக்காகக் கொண்டிருந்தது. எனவே, இந்த ஞானமானது தத்துவவியலை அடிப்படையாகக் கொள்ளாமல் மனித வாழ்வின் அனுபவத்தை மையமாகக் கொண்டு உருவானது.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளுக்கு, எப்படி நடைமுறையான தீர்வுகளைப் பெறலாம் என, இந்த ஞான இலக்கியங்கள் விளக்கி நிற்கின்றன. இறைவன் மனிதனைப் படைத்தார் என்ற கருத்தை முன்வைத்து வானத்தில் நின்று சிந்திக்காமல், மனிதன் இறைவனாற் படைக்கப்பட்டவன் என்ற கருத்தை வலியுறுத்தி, அவனைப் பிறந்த மண்ணிலிருந்தும், வாழும் சுற்றாடலிலிருந்தும் சிந்திக்கச் செயற்பட வழியாக இருக்கின்றன இந்த ஞான இலக்கிய நூல்கள். இவற்றிற் காணப்படும் மனிதர்களும், அவர்களின் பிரச்சனைகளும், நிகழும் சம்பவங்களும் இன்றைய இந்த 20ஆம் நூற்றாண்டிலிருந்து எந்த விதத்திலும் வேறுபட்டதல்ல. மாறாக, தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமானவையர்கவும். அவசியமானவையாகவும் அமைந்துள்ளன.

சகோ. இயூஜின் பிரான்சிஸ்

# பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே,

நம் லோத்து "பாகப் பிரிவினை" செய்து, சித்தப்பா ஆபிராமை விட்டுப் பிரிந்தபின், இவரின் நல்ல மனத்தைப் பார்த்து, ஆண்டவன், "ஆபிராமே உன் நல்ல மனத்தை நான் பார்த்தேன். எனவே, நான் உனக்குத் தரப்போகிற இடம் எவ்வளவு என்று தெரியுமா? நீ உன் கண் எட்டுமளவிற்கு ஏறெடுத்துப் பார். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளையும் ஏறெடுத்துப்பார்.

நீ காண்கின்ற இத்தனை இடத்தையும் நான் உனக்கு- உன் தியாகத்தின் பொருட்டு இலவசமாய்த் தருகிறேன்.

அவைமட்டுமல்ல உனக்கும் - உன் சந்ததிக்கும் இவையெல்லாம் என் சீதனப் பரிசு. இன்னும் உனக்கொரு குறை, நீ 'மலடு' என்றுதானே? அந்தக் குறையை நான் நீக்கி விடுவேன்.

வானத்தின் நட்சத்திரங்களை நீ எண்ண முடியுமா? பூமியில் உள்ள புழுதிகளை உன்னால் எண்ணிக் கணக்கிட முடியுமா? இவைபோல் உன் சந்ததியை நான் பல்கிப் பெருகச்செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்தார்.

மலட்டுத்தன்மை பொருந்திய ஆபிரகாம் நம்பமுடியாத நிலையிலும் ஆண்டவன் சொல்லி விட்டாரே, என்னைப்பொறுத்த மட்டில் அவர் வாக்குறுதி மாறாதவர்தானே என்றெண்ணி ஆண்டவா! நீயே சரணம் என்று அனைத்தையும் ஆண்டவனிடம் ஒப்படைத்து அடிபணிந்தார்.

பார்த்தீர்களா மருமக்களே, இப்படிப்பட்ட யாராவது நம் மத்தியில் இருக்கிறார்களா? அவநம்பிக்கைப் பட்ட எம் இனத்திலே, பலர் வாழ்கிறதாற்றானே இறைவன் எம்மைக் கைவிட்டு விட்டார் என்ற மனநிலையில் இருக்கின்றோம்.

நம்ப முடியாத நிலையிலும், இறைவன் எம்மைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் நாம் வாழ்ந்தால், இறைவன் எம்மைக் கைவிட்டு விடுவாரா? என்ன?

ஆபிரகாம் சந்ததி பெருகியதா?

கட்டாயம் அடுத்த வாரம்

அன்புடன்
பைபிள் மாமா

அறிந்துகொள்ளுங்கள்—26

# பெருந் திரளின் தந்தை

"ஆபிரகாம்" என்ற பெயருக்கு "பல இனத்தவரின் தந்தை" என்றும் "இறைவன் உயர்ந்தவர்" என்றும் பொருள் கூறுவர். இறைவன் ஆபிரகாமை அழைக்கையில் "நாம் உன்னைப் பெருங்குடியாய்ப் பெருகச் செய்து, உன்னையும் ஆசீர்வதித்து உன் பெயரையும் மேன்மைப் படுத்துவோம் ...பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப் படும்" என்றார் (ஆதி 12:2-3). ஆபிரகாம் பல இன மக்களுக்குத் தந்தையா? என்ற வினா எழும்பும். ஆபிரகாமுக்கு ஈசாக் வழியாக வந்த இஸ்ராயேல் இனம் மட்டுந்தான் ஆபிரகாமின் இனம் என்றில்லை.

ஆபிரகாமுக்கு அடிமைப் பெண் ஆகார் வழியாக இஸ்மாயேல் பிறந்தான். இவன் வழிவந்தவர்கள் இஸ்மாயேலர், ஆபிரகாமுக்கு உரிமை மனைவி சாராள் வழியாக ஈசாக் பிறக்கிறான். ஈசாக்கிற்கு இரு பிள்ளைகள் 'ஏசாயு' "யாக்கோபு". ஏசாயு வழியாக ஏதோம் இனத்தவர்களுக்கும், யாக்கோப்பு வழியாக இஸ்ராயேல் இனத்தவர்களுக்கும் ஆபிரகாம் தந்தை.

சாராள் இறந்தபின் ஆபிரகாம் செத்தூராளை மணந்து அவள் வழியாக ஜமிரான், ஜெக்சான், மதான், மதீயான் ஜெஸ்போக், சூயே என்பவர்களைப் பெற்றார் (ஆதி 25:1-2). இவர்கள் மூலமாகப் பல அராபிய இனத்தவரின் தந்தையாகிறார் ஆபிரகாம்.

இவை அனைத்தும் ஊன் சார்ந்த உறவுகள். இதன்படி அவர் பல இனத்தவரின் தந்தை ஆகிறார். ஆனால், ஆபிரகாம் இறைவனோடு நெருங்கிய தொடர்புடையவர். இறைவனின் நெருங்கிய நண்பன். இறைவாக்குறுதியில் விசுவாசம் கொண்டு இறைவெளிப்பாட்டை உலகிற்கு அளித்தவர். இதிதோன் ஆபிரகாமின் பெருமை வெளிப்படுகிறது. ஆபிரகாம் மீட்பு வரலாற்றிற் சிறப்பானஇடம் பெறுகின்றார், ஆபிரகாமின் வழிவந்த இஸ்ராயேல் இனத்தில் மீட்பர் கிறிஸ்து தோன்றினார். இந்த மீட்பரின் வழியாக உலகம் ஆசிபெறுகின்றது. ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாவது உடல் ரீதியான உறவினால் வருவதன்று. மாறாக கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதினால் வரும் உறவே ஒருவனை ஆபிரகாமின் பிள்ளைகளாக்குகிறது. (கலாத் 3: 29)

எனவே, கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட அனைவரும் ஆபிரகாமின் பிள்ளைகள். எனவே, கிறிஸ்துவை ஏற்று விசுவசிக்கிற அனைவரும் ஆபிரகாமின் பிள்ளைகள். கிறிஸ்தவர், இஸ்ராயேலர், முஸ்லீம்கள் அனைவருக்கும் ஆபிரகாம் தந்தை. பல இனத்தர்களுக்கு அவர் தந்தை.

இ. ம. ஜெயசீலன்

# காவலன் கண்மணிகள்

**மடல் 32:**

அன்புக்கினிய கண்மணிகாள்,

அன்பர் யேசுவின் ஆசிகள் என்றும் உம்முள் நிறைவதாக. இன்றையப் பத்திரிகைகளைப் படித்தீர்களா? அவற்றில் எவை பெரிய எழுத்திற் கவர்ச்சியான வடிவில் வருகின்றன?

கொலைகள், கொள்ளைகள், கோஷ்டி மோதல்கள், பண மோசடிகள், கள்ளக்கடத்தல்கள், கலப்படச் செய்திகள், நோய்கள் போன்ற செய்திகளே நிறைய வருகின்றன.

ஒருபுறத்தில் ஓர் உயிரைக்காக்கப் போராடுபவனும், அதேவேளை பல்லாயிரம் உயிரைப் பலியெடுக்கும் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்பவனும் மனிதன்தான். விஞ்ஞான விந்தைகளால் விண்வெளியில் அற்புதங்கள் புரிபவனும், அதே வேளை அற்பத்தனமான மிருகத்தனமான முறையில் வாழ்பவனும் மனிதன்தான். அன்புக் கண்மணிகளே, மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன் என்று கூறியபோது அவன் அன்பு, பாசம் நிறைந்தவனாகக் காணப்படுகிறான். அதே வேளை, மனிதன் பசாசின் தந்திரங்களுக்கு அகப்பட்டபோது அவற்றிற்கு மாறாக நடந்து கொள்கிறான். கடவுளை விட்டு விலகிச் செல்ல, அவன் துன்பங்கள் விரிந்துகொண்டே செல்லும். வரவிருக்கும் வாழ்வில், துன்ப துயரங்களை வெற்றிகொள்ள இறைவனின் அன்புத்திட்டத்தில் முழு நம்பிக்கை கொண்டு, அவரே தஞ்சம் என்று வாழும் அன்பு நெஞ்சங்களாக மாற்றம் பெறவேண்டும்.

அடுத்தவாரம் சந்திப்போம். வணக்கம்.

உங்கள் அன்பின்
அன்பு விழி.

## தமிழ்

| சொல் | உருவம் | பருவம் |
|---|---|---|
| அரும்பு | பூ | அரும்பும் பருவம் |
| மொட்டு | பூ | மொட்டு விடும் பருவம் |
| முகை | பூ | முகிழ்க்கும் பருவம் |
| மலர் | பூ | மலரும் பருவம் |
| அலர் | பூ | மலர்ந்த பருவம் |
| வீ | பூ | வாடும் பருவம் |
| செம்மல் | பூ | வதங்கும் பருவம் |

| அங். எண் | பெயர் | ஆண்டு | பாடசாலை |
|---|---|---|---|
| 14 | கோ. யுடிற்ரா | 7 | சுண்டிக்குளி மகளிர் பாடசாலை |
| 15 | ம. சோ. அகிலா | 8 | சென் ஆன்ஸ் ம வி. வங்காலை |
| 16 | ஜே. மெடோனா சொய்சா | 8 | புனித ஆனாள் ம. வி. வங்காலை |
| 17 | ஜே. தீபன் சொய்சா | 6 | புனித ஆனாள் ம. வி. வங்காலை |
| 18 | வி. மறின் நிலானி | 11 | புனித சவரியார் பெண்கள் மன்னார் ம. வி. |
| 19 | ஜே. டெமோக்கிளஸ் | 8 | சாந்தலூசியா ம. வி. கொழும்பு |
| 20 | அ. ப. எழில் அமலன் | 6 | புனித என்றி அரசர் கல்லூரி, இளவாலை |

**கணிதம்:** படிமுறை 3: சர்வதேச நியமக் குறியீடுகள்

1) நீட்டல் அளவை

10 மில்லி மீற்றர் (10 mm) — 1 சென்ரி மீற்றர் (1cm)
10 சென்ரி மீற்றர் (10 cm) — 1 டெசி மீற்றர் (1 dm)
10 டெசி மீற்றர் (10 dm) — 1 மீற்றர் (1 m)
10 மீற்றர் (10 m) — 1 டெக்கா மீற்றர் (1 dam)
10 டெக்கா மீற்றர் (10dam — 1 ஹெக்ரோ மீற்றர் (1 hm)
10 ஹெக்ரோ மீற்றர் (10 hm) — 1 கிலோ மீற்றர் (1 km)

### பயிற்சி

1. சென்ரி மீற்றரிற் கூறுங்கள்
   i) 2 m ii) 2m 25cm iii) 7m 68cm.
2. மீற்றர், சென்ரி மீற்றரிற் கூறுங்கள்
   i) 400cm ii) 508cm iii) 1053cm
3. மீற்றரிற் கூறுங்கள்
   i) 3km ii) ½km iii) 1km 8m
4. கிலோ மீற்றர், மீற்றரிற் கூறுங்கள்
   i) 4 201m ii) 7 008m iii) 3 603m

அடுத்து வருவது நிறுத்தலளவை

**நொடிப்பொழுது நொடி**

விடைகள்: 1) தண்ணீர் 2) நாக்கு 3) நெருப்புக்குச்சி 4) சோளம் 5) வெங்காயம் 6) புகார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# இரண்டு தழும்புகள்

என்றோ உடலில் ஆழமாக ஏற்பட்ட காயத்தின் தழும்பு களைத் தடவிப் பார்ப்பதிற்கூட ஒரு தனிச்சுகம் இருக்கின்றது. நான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்திற் பந்துவிளை யாட்டில் ஒருவன் தன்பூட்ஸ் காலால் மிதித்ததில் ஏற்பட்ட காயத்தின் தழும்பு அது. அதனைக் காணும் பொழுதெல் லாம் பாடசாலைக் காலத்தில் நான் உதைபந்தாட்ட வீரனாக இருந்த இன்ப நினைவுகள் மிதந்துவரும்.

முரட்டுத்தனமாகக் காலை மிதித்துவிட்டு- என்காலால் இரத்தம் பெருக்கெடுப்பதைக் கண்ட அவன் கூறிய வார்த் தைகள்: “வெரிசொறி”.

அவன் சொல்லி விட்டான்; ஆனால், என் உடலில் அன்று ஏற்பட்ட வேதனையும், இன்று வரை இருக்கும் தழும்பும் சாதாரணமானவைகளா?

சாய்வு நாறகாலியில் நீட்டி நிமிர்ந்து கிடந்துகொண்டு என் காலைப் பார்க்கும்பொழுதெல் லாம் அந்தத் தழும்பு என் கண்களிற்படும். அன்றும் அப் படித்தான் சாய்வுநாற்காலி யில் கிடந்துகொண்டு பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்தேன்.

வெளித் தகரப்படலையைத் திறந்து கொண்டு எவரோ முதியவர் நிதான நடைபோ ட்டு வருவது தெரிந்தது. கூர்ந்து பார்த்தேன். மறுகணம் வியப் பால் என்விழிகள் விரிந்தன.

சந்தேகமில்லை அவர்தான். உடலில் தளர்ச்சி இருந்தாலும் பழைய கம்பீரத்தின் சாயல் அப்படியே இருந்தது. ‘பட்’ டென்று எழுந்து கொண்டேன் என்றாலும் ‘இந்த மனுஷனுக்கு மரியாதை கொடுக்கத்தான் வேண்டுமா?’’ என்று அதராத்மா ஆவேசமாகக் குரல் கொடுத்தது என்றாலும் இத் தனை காலத்தின் பிறகு என் வீடு தேடிவரும் அந்தப் பெரிய மனிதரை வார்த்தைகளாற் குதற என் மனம் இசைய வில்லை. அனைத்தையுப உள்ள டக்கி, “வாருங்கள் ஐயா” என்று வரவேற்றேன். சுமார் இருபது வருடங்களின் முன் னர் நான் இரவுக் காவலாளி யாக வேலை பார்த்த அலுவல கத்தின் தலைமை இலிகிதர் அவர். மரியாதை கொடுக்கத் தானே வேண்டும்.

நான் அந்த அலுவலகத்தின் ‘வாச்சர்’. அவரைப் போல நானும் அரச சம்பளம் வாங் கும் ஊழியன் ஆனல், பகலில் அவர் வீட்டுக்கும் நான் ஊழி யனாக இருக்க வேண்டும் என்று அன்று எதிர்பார்த்தது தவறு. என் குடும்பம் பெரி யது. அதனல் பகலிற் வேறு கூலிவேலைக்குப் போய்க் கஷ்டப் பட்டு உழைத்தேன். அதன் பயன்—இரவு வேலை நேரத்தில் சில வேளைகளில் கண்ணயர்ந்து தூங்கிவிடுவதுண்டு. தன்வீட் டுக்கு ஊழியம் செய்ய மறுத் ததற்காக—அதன் பழிவாங்க லாக—கடமை நேரத்தில் நான் தூங்கிய குற்றத்தைப் பெரி தாக்கி—விசாரணை செய்து குற் றத்தை நிரூபித்து, அன்று தற்காலிக ஊழியனாக இருந்த என்னை வேலையைவிட்டு நீக்கிய பெருமை அவருக்கே உரியது.

வந்தவர் அமர்ந்து பேசினார்.

“செல்லத்துரை, நான் இப்போ பென்ஷனாயிற்றன். ஆனல், நான் சாகிறதுக்கு முந்தி உன்னைச் சந்திக்க வேணும் என்ற உணர்வு. அதுதான் உன்னைத் தேடி வந்தேன்.

எனக்கு என்ன பேசுவதென் றே தெரியவில்லை. அவர் பேசு வதையே கேட்டுக் கொண்டி ருந்தேன்.

“அதிகாரத்தில் இருக்கிற போது, பலதடவைகளில் நாங்கள் எங்களை மறந்திடுகி ரோம். ஆனல், பிற்காலத்தில் தான் அதுக்கெல்லாம் பிராயச் சித்தம் செய்யவேணும் என்ற ஆசை, ஏக்கம் எழுகிறது. அன்றைக்கு நீ செய்த குற்றத் துக்குத் தண்டனை தரவேணும் என்ற கடமை உணர்வைவிட, எனக்கு மரியாதை தராத உன்னைப் பழிவாங்கவேண்டும் என்ற வேகத்தில்தான் உன் பிழைப்பிலே மண்ணைப் போட் டேன்; ஒரு பிள்ளைகுட்டிக் காரனை நடுத்தெருவில் விட் டேன்”

“அதுக்கு இப்ப என்னய்யா? அதெல்லாம் பழைய கதை”

“இல்லை செல்லத்துரை, கதை பழசுதான். ஆனல், அது செய்யிற மன உறுத்தல் இன் னும் தீருதில்லையே. இன்னு மொன்றைச் சொல்லவேணும். உனக்குப் பிறகு வாச்சராய் வந்தானே. அவன் நான் காலால இட்ட கட்டளையைத் தலையால செய்தான். அவன் எனக்கு விசுவாசமானவன் என்று நான் அப்போ சந்தோ ஷப்பட்டேன். அவன் என் குடும்பத்தில ஒருவன் போலவே பழகினன். அப்படிப்பட்ட ஒரு வனுடைய சேவை தேவை என்று நான் அன்றைக்கு அதைப் பொருட்படுத்தவே இல்லை... ஆனல்......”

தொடர்ந்து பேச முடியாது இளைத்தார். நான் மௌனமாக இருந்தேன். அவர் தொடர்ந் தார்.

“அந்த ராஸ்கல், என்னைப் பற்றி... என் மனைவியைப் பற்றி... என் வயசுக்கு வந்த குமருகளைப் பற்றி யெல்லாம் மற்றவங்களிட்ட என்னவெல் லாம் சொல்லித்திரிஞ்சிருக்கி ருன் தெரியுமா? ஒழுக்கம் கெட்ட குடும்பம் என் குடும்பம் என்று கந்தோரில வேலை செய் யிறவங்க என் முதுகுக்குப் பின் னல நையாண்டி செய்யிற அள வுக்குக் கதைகள் கட்டி விட்டி ருக்கிருன். எனக்கு வேண்டிய வங்க இதுகளைப்பற்றிக் கேட்ட போது, எனக்கு என்னமறு மொழி சொல்லுறதென்றே தெரியேல்ல, அவமானம் தாங்க ஏலாமல் நானே வேலைமாற்றம் கேட்டு வாங்கிப் போயிற் றேன்......”

அன்று அவர் குடும்ப விடயங் கள் அசிங்கமாகப் பேசப்பட்ட செய்திகள் என்காதிலும் விழுந் திருந்தன. ஆனல், அவை உண்மை அற்றவை என்பதும், எனக்குப் பின்னல் வாச்சராக வந்தவன், அப்படி மேலதிகாரி யின் குடும்ப அந்தரங்கங்களைப் பறைசாற்றுவதன் மூலம் தான் அவர்களோடு நெருங்கியிருப்ப வன் என்று காட்டிக் கொள்வ தற்காகக் கூறியவை. இப்படி அபாண்டமாக பேசித்திரிய வேண்டாம் என்று நான்கூட அன்று அவனைக் கண்டித்திருக் கிறேன்.

நாவண்ணன்.

“செல்லத்துரை அவன் என க்கு அமைச்சல் உடையவன் போலக்காட்டிச் செய்த தீமை யை விட, நீ எனக்கு அமையா மலே நன்மைசெய்தவனப்பா... நான் அன்றைக்கு உனக்குச் செய்தது கொடுமை. அதை உன்னட்டச் சொல்லி மன்னிப் புக் கேட்டாத்தான் எனக்கு ஒரு ஆறுதல் என்று நினைச் சேன். அதுதான் உன் வீடு தேடி வந்தேன். இப்போ எனக்கு நிம் மதி. நான்போய் வரட்டுமா?”

நடப்பது கனவா நனவா என்ற அதிர்ச்சியில் இருந்த நான் அவரை உபசரிக்கக் கூட மறந்த தவறை உணர்ந்து ‘ஐயா முதல் முதல் என் வீட்டுக்கு வந்தனீங்கள் ஒன்று மே குடிக்காமல் போறீங் களே!”

“ஒன்றும் வேணமப்பா. எனக்கு டயபிற்றிஸ், இனிப்பு ஒத்துக் கொள்ளாது, சாப் பாட்டு விஷயம் மிகவும் கட் டுப்பாடு. கொஞ்சம் பச்சைத் தண்ணி தா. அது போதும்.”


கொடுத்தேன்—விடை பெற் றுச் சென்றார். அப்பொழுதும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனு கச்சாய்வு நாற்காலியிற் சாய்ந் தேன். காலில் உள்ள அந்தப் பழைய தழும்பு கண்களிற் பட் டது. என்றோ ஏற்பட்ட ஆழ மான காயத்தின் தழும்பு. அதைத் தடவிப் பார்த்தேன். இனம் தெரியாத சுகம் தெரிந் தது.

வாழ்வுதரும இறைவாக்கு

அஞ்சாதே, ஏனெனில் நீ
அவமானம் அடையமாட்டாய்.
கலங்காதே, ஏனெனில் நீ
வெட்கத்துக்குள்ளாக
மாட்டாய்.
உன் இளமையின் வெட்கத்தை
மறந்து விடுவாய்.

இசை 54: 4

இறைவாக்கு வாழ்வுதரும்




(10)

மலையாளத்தை வந்தடைந்து
மாதம் மூன்று ஆகு முன்னர்
தலையானதாய்த் தம்பணிக்குத்
தமிழ் மொழியைக் கற்று மேலும்
நிலையாய் அங்கு நின்றிடாது
நெடும்பயண நடைதொடர்ந்து
தூத்துக்குடித் துறையதனைத்
துறவிவந்தார் சீடரோடு.

அங்கிருக்கும் ஆன்மகுரு
ஆரோ அல்லர் அவரின் தோழன்
முன்னர் குரு மாணவனாய்ச்
சின்னப்பர்கல் லூரிதன்னில்
கற்றவர்தான் என்றதாலே
காரியமும் இலகுவாச்சு.

கப்பல் ஏறி ஈழம் நோக்கிக்
கத்தோலிக்கக் குருக்கள் போதல்
தப்பானது தவறித்தானும்
தம்மை மீறித் தவக்கோலத்தர்
அப்பாற்போக அனுமதிக்கார்
ஆளுவோர்கள் ஆன டச்சின்
அப்பொழுது அதுவேசட்டம்
அதையும் மீறித் திட டமிட்டார்.

நண்பன்வந்த நோக்கம் தன்னை
நன்குணர்ந்து ஆன்மகுரு
பண்ணிவந்தார் காரியங்கள்
பார்க்காதவர் போலிருந்து
எண்ணித் திட்டம் போட்டுவந்தார்
ஏமாற்றிட ஆளுவோரை
அண்ணல் வாசின் கையுதவி
அவசியமாய்ப் போனதாலே
தன்னை மீறும் காரியமாய்த்
தவறிப் போச்சுப் போட்டதிட்டம்.

தவக்காலமும் வந்தடைந்த
தருணம் அது ஆனதினற்
பவமே கேட்டுப் பணியேநல்கப்
பணித்தார் குரவரான நண்பர்
உருமாறியே நின்ற யோசே
உண்மையான குருவினுடையில்
தருவோராகிச் சடங்குகளைத்
தன்கடமை தந்தார் பங்கில்

அருளுடையான் இவரின் தோற்றம்
அனைவருக்கும் அச்சாம் நெஞ்சில்
தெருவிற் பின்னர் செல்லும் வேளை
தெரிந்த முகமே என்றுகண்டார்
வருவோர் போவோர் நிற்போர் யாரும்
வதனந்தன்னைக் கூர்ந்துபார்த்து
“வதனம் இதுவும் வாசேபோல
இவரே அவர்தான்” எனறே நின்றார்.

ஊரின் வாயை மூடவென்று
உலைமூடிதான் உதவுமாமோ?
ஊரும் அறிய உலகும் அறிய
உளவு அறியும் ஒற்றர்மூலம்
நாளடைவில் இவர் நடித்த
நாடகமும் வெளியாய்ப் போச்சு
ஆளை அடையாளம் கண்டு
அடுத்தவர்க்கும் சேதிபேச்சு
வேலையாவும் கெட்டுப் போச்சு
வேடங்கூட வெளிச்சமாச்சு
கூலிக்காரன் போல ஒரு
குருமறைந்து உலவி எங்கள்
வேலி தாண்டிப் போகவுள்ளான்
வெகு கவனம் என்று அங்கு
ஆளுவோரும் ஆணையிட்டு
அங்கோர் தடை ஆகிப்போச்சு

மாட்டென் உஸ்மான் என்னும் அந்த
மண்டைக் கெறு டச்சுக்காரன்
போட்ட ஆணை காரும் என்று
போகத்தடை செய்து விட்டான்
வாட்டமுற்ற வாஸ்முனிவர்
வள்ள மேறிச் செல்லும்வழி
காட்டு மென்று கையெடுத்துக்
கண்ணீர் விட்டார் கடவுள்முன்னே

மானிடன்றன் திட்டமெல்லாம்
மாற்றிவிடும் தெய்வ சித்தம்
வீணிடரைத் தந்த உஸ்மான்
வீழ்ந்தான் நோயில் மூன்றேநாளில்
ஏனிடர்கள் தந்தோம் என்று
எண்ணும் முன்னர் எமன்கைபோனன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகம விஞவிடைப் போட்டி — 11

### சரியான விடைகள் எழுதியோர்

**வங்காலே:** ப. யூடிசோபியாசூசை, அ. ஜெயதரன் லெம்பேட், அ. ஏஞ்ஸ் லெம்பேட், அ. திதிமுஸ் அன்புராஜ் லெம்பேட், அ. லறிசா லெம்பேட், அ. யூடித் குரூஸ், அ. தேவருஜன் லெம்பேட், யோ. யேசுதாசன் லெம்பேட், அ. தேவநாதன் லெம்பேட், அ. டோரு சோசை, அ. இம்மனுவேல் சோசை, அ. நிக்சன் சோசை, ப. யோண்ஸ்ரனின் சோசை, அ. செனபோன் சோசை, யே. மேரி ஜெக்குலின் புவனேஸ்வரி குரூஸ், ஜெ. மெல்வர் டலிமா, யே. அருள் ரூபன் குரூஸ், ம. மரிய கிறிஸ்ரா லெம்பேட், இ. சஞ்சுதா லெம்பேட், ம. பெனிஸ்டஸ் லெம்பேட், அ. றெசாறி யூடிற் குரூஸ், அ. அமலா மொறுய்ஸ், யோ. யேசுராணி லெம்பேட், அ. இதயராஜ் லெம்பேட், ஜே. தீபன் சொய்சா, அ. ஜெயாமேரி சொய்சா, செ. ஜான்சிராணி டலிமா, வசந்தா டலிமா, கொன்சி டலிமா, ஜே. கீதா சோசை, ஜே. தீபா சோசை, செ. தமிழ்மாறன் டலிமா, றெ. அக்விஞவாஸ், செ. றேசி சோசை, செ. யூடிற் பிறின்சி சோசை, R வசந்தா குரூஸ், செ. மெனிக் ரேவதி குரூஸ், ப. கிறகோரி சர்வானந்தராஜா பீரிஸ், S. ஜோண்சன் சோசை, டோ. மலர்வேந்தன் சோசை, ம. ஸ்ரெவனி லெம்பேட், செ. ஆன் செல்வதி குரூஸ், தே. இந்திரன் சோசை, யோ. ஞானேஸ்வரி குலாஸ், எல்மோ றெவ்வல், செ. ஜோண் பிரவதி குரூஸ், மேரி அனற் குரூஸ், அ. கொலஸ்ரிக்கா வாஸ், யோ. விஜி குலாஸ், யே. கஸ்தூரி சொய்சா, லோ. பிரான்சிஸ்கா குரூஸ், அ. றூபா குரூஸ், யே. நிமலா லெம்பேட், அ. இனசென்ற் இன்பராஜ் லெம்பேட், இ. ஆன் சியாமளா பெர்ஞன்டோ. (55 பேர்)

**இளவாலே.** S, அருமைத்துரை, S. றெட்னி, A. அல்போன்ஸ், A. நிக்சன், சு. றமேஷ், அ. மஞ்சுளா, ம.றேணுகலா, ம. வசிகலா, Y. யஸ்ரின், M. றெபேட், அ. இ. யோண் சாமிநாதர் வதனி, அன்ரன் பொஸ்கோ, பர்ஞந்து தோமாஸ், செபமாலேமுத்து ஜீவா, A. ஜசிந்தா பிறேம்னி, K. அமலா, செல்வி ஜெசி அமல்ராணி செபஸ்தியாம்பிள்ளை, இ. ஜெயா, A. நிலா, அருளப்பு செல்லக்குமார், சு. யூடிற் அனிற்ரு, அ. ஜேசி மரில்டா, Y. மேனகா சசி. (22 பேர்)

**மன்ஞர்.** செல்வி பொன்ராஜா மேரிவசந்தி, செல்வி யே. அன்ரனெல்லா, அ. றேமன் நீக்கிலஸ் விகருடோ, செபமாலே ரவி விகஞடோ, யே. யோக்கிம் தாசன், அ. சகாயசீலன், V. மேரி பற்றீசியா, ஐடா பற்றிக், A. றெசாந்தி லுசிஞ ரேச், கீ. சதானந்தன், கீ. தயானந்தி, கீ. மேரி கீதானந்தி, P. ஜேம்ஸ் சேவியர், M. பெனில்டஸ், M. வில்மாபிகிருடோ, (15 பேர்)

**யாழ்ப்பாணம்.** செல்வி மொறின் அருளானந்தம், T. மரிய திரேசா, பி. நியூட்டன், செல்வி நிலாந்தி, சி. திரேசம்மா, பி. திரேசா சாமினி, பொ. அன்ரன் டயஸ், நீ. மேரி அன்ரனீற்ரு, சி. சிவகாந்தன், சியாமா அகஸ்ரின், E. C. அகஸ்ரின், K. V. சங்கர், D. U. கமால். (13 பேர்)

**நாவாந்துறை.** அ. ஜோய் தயானந்தன், அ. ஆன் மரியராணி. பத்தலோமை பிஜிதா, பத்தலோமை செல்வி, சின்னராணி சின்னராசா, இ. எறிக் யோசவ், எமில் யோசவ், S. கனிஸ்ரா சூசைப்பிள்ளை, (8 பேர்)

**பண்டத்தரிப்பு:** அ. ஞானராணி, ப. புஷ்பா, அ தேவராணி, S. செல்வராணி, அ. சித்திரா, ஆ. யோகேஸ், ம. அன்ரன் யூட், யோ. றெமிலிசியர். (8 பேர்)

**இரணைதீவு:** தா. லியோனஸ், கிறகோரி ரெறன்ஸ், கிறகோரி எலிசபெத், ச. யோசவ்வாஸ், ச. பொனிப்வாஸ், மேரி றுபிஞ, தா. தயாளினி. (7 பேர்)

**மண்டைதீவு:** தே. மரியறீற்ரு, எ. மேரி ஆன் கிறேஸ், லூர்த் மரியசீலி, நீக்கிலாப்பிள்ளை றேஸ்மலர், அ. டிக்கோன், அ. மாலா. (6 பேர்)

**தாழையடி:** றெக்ஸி செலஸ்தீன், றெபின்சன் செலஸ்தீன், டிலாள் சிவசுப்பிரமணியம், றெணி செலஸ்தீன், கு. சுஜித், G. றஜித்தா. (6 பேர்)

**நவாலி:** சிலுவைராசா வினிற்ரு, சிலுவைராசா விஜயா, சிலுவைராசா சுதாகரன், சிலுவைராசா அருட்செல்வன், சிலுவைராசா கலிஸ்ரா. (5 பேர்)

**உயிலங்குளம்:** அ. ஜெயந்தி, பி. புஷ்பராணி, க. ஜெனிற்ரு, அ. பிலிப்புப்பிள்ளை, T. செல்வராணி. (5 பேர்)

**மிருசுவில்:** R. நிலோஜினி, R. மோகனரூஜ், ம. மரீஞ யூட்ஞ, F. நகுலன், ஐறின் நளாயினி. (5 பேர்)

**விடத்தல்தீவு:** தே. எட்வின், கிறிஸ்தியான் நொறிஸ், G. சாந்தசீலன், G. வசந்தசீலன், M. பொன்பீலியஸ். (5பேர்)

**ஊர்காவற்றுறை:** து. யூட்ஸ் மெரிற்ரு, விஜிற்ரு துரைசிங்கம், M. மேரி அனன்சியா. (3 பேர்)

**சில்லாலே:** P. ஜெயவதி, M. V. வில்லியம், P. அருமை. (3பேர்)

**அடம்பன்:** A. காமலிற்ரு, அ. யூட் நேசராசா. (2 பேர்)

**மாதகல்:** வெ. லெஸ்லின்டனி, நிர்மலா அன்ரனிப்பிள்ளை. (2பேர்

**எழுவைதீவு:** பே. மேரி அன்ரனிற்ரு, ம. லீனஸ். (2பேர்)

**புங்குடுதீவு:** மியூறின் றூபி அருட்பிரகாசம், லூசியா கிறேஸ் அருட்பிரகாசம். (2 பேர்)

**சிலாவத்துறை:** செ. சிறேமினி. **மல்லாகம்:** ந. பியற்றிஸ். **பெரியநாவற்குளம்:** அ. ஞானம். **கொச்சிக்கடை:** அஞ்சலா ஆனந்தன்புள்ளே. **செட்டிகுளம்:** யோகா திருச்செல்வம். **தலைமன்ஞர்:** L. சாந்தி லெம்பேட். **பளை:** T. திரேசாமலர். **வவுனியா:** மே. லக்ஸ்மன் சேவியர். **கொழும்பு:** F. ஜோய் ஜெகதீஸ். **சாவகச்சேரி:** G. ஜெமல்ராஜ்.

முகவரியற்ற விடைகள் — 3.

**பரிசுபெறும் நற்பேருளர்**

மே. லக்ஸ்மன் சேவியர், இறம்பைக்குளம், வவுனியா.

## வேதாகம விஞவிடைப் போட்டி — 12

விடைகளை மாத்திரம் தபால் அட்டையில், தெளிவாக எழுதி உங்கள் பெயர், முகவரியுடன் 1-10-87ஆம் திகதிக்குமுன் பாதுகாவலன், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூ. 15/=, விடையும், பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 16-10-87இல் வெளிவரும்.

### விஞக்கள்

1. தம் போர்வையை மடித்து அதைக்கொண்டு நீரை அடித்து இரண்டாகப் பிரித்துக் கால் நனையாமல் நடந்து நதியைக் கடந்த இறைவாக்கினர் யார்?
2. கொள்ளையிடப்பட்டதை இரண்டு சரிபங்காகப் பங்கிட்டுப் போருக்குப் போனவருக்கு ஒருபங்கும், சாதாரண மக்களுக்கு ஒருபங்கும் கொடுப்பாய் என, ஆண்டவர் யாரிடம் கூறிஞர்?
3. நாட்டைப் பங்கிடும்போது, முதற்கண் யாருக்கு நாட்டின் ஒரு பகுதியைக் கொடுத்துவிடுங்கள் என இறைவாக்கினர் கூறிஞர்?
4. நாட்டைப் பங்கிடும்போது இஸ்ராயேல் கோத்திரத்தாரைத் தவிர வேறு யாருக்கு ஒரு பகுதி பிரித்துக் கொடுக்கப்பட்டது?
5. கொள்ளைப் பொருள்களைப் பங்கிடுவோரிடம் என்ன உணர்வு ஏற்படுகின்றது?
6. வெள்ளியை அவன் சேர்த்து வைத்தாலும் உடைகளை அடுக்கி வைத்தாலும், அவன் அடுக்கிவைத்ததை அவனல்லன் நீதிமான் ஒருவன் உடுத்திக் கொள்வான்; வெள்ளியையோ மாசற்றவர்கள் பிரித்துக் கொள்வார்கள் எனக் கூறியவர் யார்?

விடைகளைப் பின்வரும் பகுதிகளிற் காணலாம்: யோபு 27, இசையாஸ் 9, எசேக்கியேல் 45, 47, எண்ஞகமம் 31, 2 அரசர் 2.

### போட்டி 11. சரியான விடைகள்

| | | |
|---|---|---|
| 1. அப்சலோம் | 2. சூசை | 3. ரெபேக்காள் |
| 4. அபிகாயில் | 9. வஸ்தி | 6. எஸ்தர் (ஏதிஸ்ஸா) |

## புனித வளஞர் O. M. I. குருமடம்

**அவனியெங்கும் ஆண்டவரின் அரசை அமைத்திட**
**அமலமரித் தியாகிகள் வரிசையில் அணிசேர**

### ஆண்டவர் உன்னை அழைக்கிறுர்.

எதிர்வரும் ஆண்டில் எம் குருமடத்திற் சேர விரும்புகின்றவர்கள் ஐப்பசித் திங்கள் 20ஆம் நாளுக்கு முன்னதாக (20–10–87) எம்முடன் தொடர்பு கொள்ளவேண்டும். தற்போது ஏழாம் வகுப்பிலும் (வருடம் 8), G. C. E. (O/L)இல் சித்தியடைந்தவர்கள், G. C. E. (A/L) இல் சித்தியடைந்தவர்கள் ஆகியோரின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். சிரேஷ்ட வகுப்பினருக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

அதிபர்

புனிதவளஞர் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## வ / ஓமந்தை புனித ஆரோக்கிய மாதா (வேளாங்கண்ணி)

## திருவிழா

14–09–87 திங்கள் பி. ப. 4-30 கொடியேற்றம்.
14ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை பி. ப. 5-30
நவநாள் திருப்பலி,
18–09–87 வெள்ளி பி. ப. 6-00
நற்கருணை விழாவும் பவனியும்.
19–09–87 சனி காலே 6-30
திருநாள் திருப்பலியும் - அன்னையின் பவனியும்.
அன்னையின் ஆண்டிலே அனைவரும் அமலியின் அருள் பெற்றிடுவோம்.

பங்குத்தந்தை

## சாட்டி சிந்தாத்திரை மாதா திருநாள்

15-ந் திகதி மாலே
5 மணிக்குக் கொடியேற்றம்
15—22 வரை
மாலே 5 மணிக்குச் செபமாலே, திருப்பலி
23 மாலே 6—7 வரை
மரியன்னையோடு திருமணி, திருப்பலி
நற்கருணைப் பவனி
24 காலே
7-00 திருப்பலி
மரியன்னையின் சுரூபப் பவனி

நாரந்தனை—கரம்பொன்
பங்குத்தந்தை

## "எம் கருத்து" குறள் தெளிவுரை

இவர்க்கு இது செய்தால், இன்னது கிடைக்கும் என்று பிரதியுபகாரம் கருதாது, உதவி செய்பவர்களின் பயனை ஆராய்ந்தால், அந்த நன்மை கடலினும் பெரிது.

## வாசகர் கருத்து

பாதுகாவலனின் தற்போதைய வளர்ச்சி கண்டு கிறிஸ்தவர்களாகிய நாம் பூரிப்படைகிறேம். அது மேலும் வளர்ச்சியடையப் புதிய அம்சங்களையும் காலத்திற்குக் காலம் புகுத்தி வாருங்கள்.

இன்றைய சமுதாயத்தின் கத்தோலிக்கர்களில் எத்தனை பேர் உண்மை கத்தோலிக்கர்களாக இருக்கிறுர்கள்? பெயரளவில் மட்டுமே அவர்கள் கத்தோலிக்கராயிருப்பதற்கு காரணம் என்ன? என்பதை ஆராய்ந்து பார்த்தால்,பலருக்கு மதத்தின் மேல் தவருன கண்ணேட்டங்களும், அறியாமையும் தவருன முன் மாதிரிகைகளுமே இவற்றுக்குக் காரணமாகும். இவற்ருல் கத்தோலிக்கர் பலர் வேறு மதங்களைப் பின்பற்றுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இதன் மூலம் பிற மதத்தவர்கள் கூட எமது மதத்தின் மேல் தவருன கண்ணேட்டத்தையோ, அன்றேல் மூடக் கொள்கைகளையோ கொண்டிருக்கின்றுர்கள்.

எனவே, இவ்வாருன பிரச்சனைகள் சமுதாயத்திற் காணப்படுவதால் அவற்றைக் களைந்து உண்மை இறைவிசுவாசத்தைப் பற்றியோ அல்லது உண்மைக் கத்தோலிக்கத்தைப் பற்றியோ மக்களுக்கு அறிவித்து மக்களை வழி நடாத்த வேண்டிய ஒரு பொறுப்பைப் பாதுகாவலன் கொண்டிருக்கிறது என்ருல் அதில் தவறில்லை.

எமது மதத்தின் மீது கொண்டுள்ள அவ நம்பிக்கைகளை, மூடக் கொள்கைகளை, அறியாமையைப் பற்றி எழுதுவதால் மன மாற்றத்தை உண்டாக்கலாம்.

28-08-1987 பாதுகாவலனில் வெளிவந்திருந்த குருசுமுத்துவின் துணுக்கை வாசித்த பலரின் மனே நிலையை நான் அறிந்து கொண்டதில் இத் துணுக்கைப்பார்த்த அநேகருக்கு மன எரிச்சல் உண்டானதைக் கண்டு கொண்டேன்.

அ. ஜெயக்குமார்
பெரியபுலம், நாரந்தனை.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

21—9—87



யோசப் மத்தியாஸ்
(ஆசைத்துரை)

| | |
|---|---|
| மண்ணிற்கு மலர்ந்தாய் | விண்ணிற்கு விரைந்தாய் |
| 2–1–921 | 22–8–1987 |

"மண்ணுலகில் அன்பு செய்தோம்
விண்ணுலகிலும் உனை மறவோம்"

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 21-9-87 திங்கட்கிழமை காலே 6-00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
''ஆன்சலா''
பாஷையூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன்
PATHUKAVALAN

## குருவானவர் கைது

மத்திய பிரதேசத்திலுள்ள ஜகதல்பூர் மறை வட்டத்தில் சியூர்காவோன் மறைப் பங்கிற்குப் பொறுப்பாளராகவுள்ள பிதா தோமஸ்,துருத்தியில் ஒரு பூர்வ குடியினரை ரூபா பத்தாயிரமும் வேறு சில சலுகைகளும் அளித்து மதமாற்ற முயன்றூர் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைதானுர். இவரது பங்கில் மாசற்ற கன்னியர்சபைச் சகோதரிகளால் நடத்தப்பட்டு வந்த விமல் வித்தியாஸ்ரம் என்னும் விடுதிப் பாடசாலை கிறிஸ்தவ எதிர்ப்பாளரால் ஒரு மாதத்துக்கு முன் அழிக்கப் பட்டுவிட்டது.

ஆதிவாசிகளின் பிள்ளைகளுக்காக எட்டு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இறுதிப் பரீட்சைகளில் நூற்றுக்கு நூறுவீதம் வெற்றியீட்டியது.

இதனுல், அயற் கிராமங்களிலுள்ள ஆதிவாசிகளும் இப் பாடசாலையிற் சேர்வதையே பெரிதும் விரும்புகின்றனர்.

இதை விரும்பாத அரசாங்க அதிகாரிகள் இப் பாடசாலையிலிருந்து பிள்ளைகளை எடுக்குமாறு ஆதிவாசிகளை வற்புறுத்தினர். இது பலிக்காத போது சமூக விரோதிகளைக் கூலிக்கமர்த்தி பாடசாலையைத் தகர்த்து விட்டனர்.

## சமூக மாற்றத்திற்கான பயிற்சி

பல மக்கள் இயக்கங்களை ஊக்குவிப்போருக்காகப் பயிற்சிகள் நடத்தும் இந்தோ-ஜேர்மன் சமூக நல சங்கத்தின் குறிக்கோள்களுள் ஒன்று சமூக மாற்றங்களுக்காகத் தீவிர வினையாக்கப் பயிற்சிகளை அளிப்பதாகும்.

புதுடெல்லியிலுள்ள இந்தியன் சமூக நிறுவனத்தில் நடைபெற்ற இருவார தீவிர பயிற்சியில் 19 மறை வட்டங்களைச் சேர்ந்த 30 ஆண்களும் பெண்களும் பங்கு பற்றினர்.

இதிற் பங்குபற்றியவர்கள் உணர்த்தல், செயல் நோக்கமளித்தல், செயற்பாடு ஆகியவற்றின் மூலம் சமூக அபிவிருத்தி, அமைப்பு மாற்றம், பயிற்சிகளை நடத்தும் திறன் ஆகிய துறைகளில் அறிவு பெற்றனர்.

இப்பயிற்சி பலனுள்ளதாயிருந்தது என்பது பங்குபற்றியோரிடமிருந்து அறியக் கூடியதாயிருந்தது.

பங்களூரிலும் பீகாரிலும் இதுபோன்ற பயிற்சிகள் நடத்தப்படுமெனத் தெரியவருகிறது.

## கண்டி மறைவட்ட ரீதியில், நூற்றுண்டு விழா; யேசேவாஸ் விழா.

வந்தனைக்குரிய யோசேவாஸ் அடிகளார் இலங்கை வந்து 300 ஆண்டுகளின் நிறைவும், ஈழத் தாய் பெற்றெடுத்த எழில் மிகு மலை நாடாகிய கண்டி மறை வட்டம் ஆரம்பமாகி 100 ஆண்டுகளின் நிறைவு விழாவும் புரட்டாதி மாதம் 6ஆம் திகதி கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியிலே கண்டி மறை வட்ட ரீதியிலே வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

மண்டபமும் அதன் சுற்றுப் புறமும் மக்கள் கூட்டத்தினுல் நிரம்பி வழிந்தது. ஏறக்குறைய 7-8 ஆயிரம் பேர் இவ் விழாவிலே பங்கு கொண்டனர். கண்டி மறை வட்டத்திலே சேவை புரியும் குருக்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள் பெருந்திரளான அளவில் விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

காலை 8.45 மணியளவில் விழா ஆரம்பமானது. மைதானத்திலிருந்து கல்லூரிவரை மக்கள் தமது பங்கின் பெயர் பொறித்த கொடிகளுடன் ஊர்வலமாக வந்த காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. கண்டி ஆயர் அதி. வண வியானி ஆண்டகை வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று, சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

பங்கு பற்றியோர் சிறுவர், இளைஞர், வளர்ந்தோர் என மூன்றுகுழுக்களாக (தமிழிலும், சிங்களத்திலும் வெவ்வேருக) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் வெவ்வேருக உரைகள் நிகழ்த்தப்பட்டன. இவ்வுரைகளிலே வந். யோசேவாஸ் பற்றிய அறிவும் புகட்டப்பட்டது. யோசேவாஸ் அடிகளாரின் இலங்கை வருகை, அவரது சேவை ஆகியவற்றை விளக்கக் கூடிய விதத்தில் ஒரு கண்காட்சியும் ஆயத்தப் படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், கண்டி மறை வட்டத்திலுள்ள எல்லா பங்குகளும் தமது பங்கு பற்றிய விளக்கங்களை அளிக்கும் விளம்பரத்தையும் இக்கண் காட்சியிலே பார்வைக்கு வைத்திருந்தது பயன் அளிக்கக் கூடியதாக இருந்தது. இரு மொழிகளிலும் திருமணித்தியாலங்களும் நடைபெற்றன.

மாலை 2.45 மணியளவில் கண்டி முன்னுள் ஆயர் அதி. வண. போல் பெரேரா, தற்போதைய ஆயர் வியானி பெர்ஞண்டோ ஆகியோருடன் ஏறக்குறைய 40 குருமார் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

யோசேவாஸ் அடிகளார் இலங்கை வந்து 300 ஆண்டுகளைக் குறிக்கும் முகமாக 300 பேர் அடங்கிய பாடற்குழுவும், கண்டி மறை வட்டம் ஆரம்பித்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதைக் குறிக்கும்முகமாக 100 பேர் அடங்கிய பீடப் பணியாளர்களும் ஏற்பாடு செய்யப்பட்டமை,திருப்பலிக்கு மேலும் மெருகூட்டியது,

பூசை — செபங்கள், பாடல்கள், உரைகள் அனைத்திலுமே சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது வரவேற்கக் கூடியதாயும், கண்டி மறை மாவட்டம் அனைவரையும் ஒரு தாய் மக்களைப் போலத் தன் இரு கண்களைப் போல ஏற்றுக் கொள்வதைப் பறை சாற்றுவதாயும் அமைந்திருந்தது.

முனிவருக்குப் புனிதர் என்ற பட்டம் கூடிய சீக்கிரமே கிடைக்க இறைவனை இறைஞ்சுவோம். — ரஞ்சி.

படிவத்தை.

## அமெரிக்க பயணம் அரசியல் விஜயம் அல்ல

திருத்தந்தை 9 வருடத்தில் மேற்கொள்ளும்36வதுபயணம் அரசியல் ரீதியாகவோ, அல்லது பிரச்சனைக்குரிய விவகாரங்களைப்பற்றிக் கத்தோலிக்கத் திருச்சபையின் கருத்துக்களை எடுத்துக் கூறும் வாய்ப்பாகவோ பயன்படுத்தப்பட மாட்டாதென்றும், தனது ஆடுகளைக் காணவரும் மேய்ப்பனுகவே திருத்தந்தை வருகிறுர் என்றும், அமெரிக்கக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்கள் பேரவையின் தலைவர் பேராயர் யோன் மே கூறியிருக்கிறுர்

## பொதுநிலையினர் பயிற்சி

''அகில இந்திய கத்தோலிக்க சங்கம் பொது நிலையினருக்குப் பயிற்சியளிப்பதற்குப் பெருமுயற்சி எடுக்கின்றது. உருவாக்கப் பயிற்சிகளின் மூலம் தலைமைத்துவம் உருவாகும். ஏனெனில், பொது நிலையினரின் ஆன்மீக, இறையியல், சமூக அறிவைப் பெறுவதற்கு இவை 'துணைபுரியும்'' என, கல்கத்தா மறை வட்ட முதல்வர் பிதா பிரான்ஸிஸ் கோமஸ் வங்காள கத்தோலிக்கச் சங்கத்தின் 70 வது கூட்டத்தின் போது கூறினுர்.

## குஜராத்திக் கத்தோலிக்கப் பெண்ணின் பரதநாட்டிய அரங்கேற்றம்

பதினேழு வயதான பிரபா சைமனின் பரத நாட்டிய அரங்கேற்றம் இங்குள்ள தாகூர் மண்டபத்தில் நடைபெற்றது. பரத நாட்டிய அரங்கேற்றம் செய்த இரண்டாவது குஜராத்தி கத்தோலிக்கப் பெண் இவராவார்.

குஜராத்தி கத்தோலிக்க சமூகம் 94 வயதே நிரம்பியதாகும். ஆதிவாசிகள், பூர்வ குடிகள் உட்பட ஏறக் குறைய 80,000 கத்தோலிக்கர் உள்ளனர்.

வேறு ஏழு பெண்களுடன் அரங்கேற்றம் செய்த செல்வி பிரபா, தர்ப்பணு கலைக் கழகத்தில் ஏழு ஆண்டுகள் பயின்றவர். தர்ப்பணு உலகப் பிரசித்தி பெற்ற திருமதி மிருநாளினி சாராபாயினுல் நிர்வகிக்கப்படுகிறது.

திருமதி மிருநாளினி அங்கு சமுகமாயிருந்தஇரசிகர்களையும் புகைப்படமெடுப்போரையும் பார்த்து நர்த்தகிகள் தம்மை இறைவனுக்கு அர்ப்பணம் செய்கிற படியால் அவர்களது செயல் ஒரு செபமும் வழிபாடுமாகுமென்றும், இரசிகர்கள் தாம் ஓர் ஆலயத்தில் இருப்பதாக எண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அரங்கேற்றத்தின் முடிவில் செல்வி பிரபாவுக்கு நாட்டிய பூஷண் விருதுவழங்கப்பட்டது.

செல்வி பிரபா ஒரு கன்னியர் மடத்தில் சேர்ந்து மக்களுக்குச் சேவை செய்வதன் மூலம் இறையன்பைப் பரப்ப எண்ணியுள்ளார்.

## கன்னியர்மடத்திற் குண்டுவெடி

டார்ஜீலிங் நகரிற் புதிதாக அமைக்கப்பட்ட நசரேத் அன்புக் கன்னியர் மடத்தில் ஒரு குண்டுத் தாக்குதல் இடம் பெற்றதாகச் செய்தி கிடைத்துள்ளது.

கோர்க்கா தேசிய விடுதலை முன்னணியினராலேயே கன்னியர் மடத்தின்மீது குண்டு வீசப்பட்டதாக நம்பப் படுகிறது. ஒருவரும் பலத்த காயங்களுக் குட்படாவிட்டாலும், குண்டு வெடித்த அறையில் இருந்த ஒரு சகோதரி கடுமையான அதிர்ச்சிக்கு உள்ளானுர். கட்டிடத்துக்கும் தளபாடங்களுக்கும் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங் மலைப் பிரதேசத்திலுள்ள கோர்க்கர்கள் ஒரு தனி மாநிலம் கோரி கிளர்ச்சி செய்து வருகிறுர்கள்.

சபையின் மாகாணத் தலைவி அருள்செல்வி சோபனு விடயத்தை நேரிற் கவனிக்க டார்ஜீலிங் சென்றுள்ளார்.

## மெக்காப் படுகொலைக்கு திருத்தந்தை கவலை தெரிவித்தார்

இஸ்லாமிய புனித நகரமான மெக்காவில் நிகழ்ந்த படு கொலையைக் குறித்து, திருத் தந்தை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். ஒப்புரவும், சகோதரத்துவமும் ஏற்படத் திருத் தந்தை வழிபாடு நடத்தினுர். மெக்கா நகரில் யூலை 31 ஆம் நாள், சவூதி அரேபிய பாதுகாப்புப் படையினருக்கும், ஈரானிய திருப்பயணிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 400 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

## பாதுகாவலன் வளர நிதி

| | | |
|---|---|---|
| 136. | அன்பர் ஒருவர். | 25-00 |
| 137. | புனித குழந்தை திரேசாள் சிறுமியர் மன்றம், புனித யாகப்பர் பங்கு, இளவாலை. | 50-00 |
| 138. | திரு. K. T. ஞானப்பிரகாசம், நெடுந்தீவு. | 100-00 |
| 139. | அன்பர் ஒருவர். | 10-00 |
| 140. | புனித வின்செண்டிபோல் சபை, இளமருதங்குளம், வவுனியா. | 50-00 |
| 141. | 1. தமிழ்ச் செல்வன் மாசிலாமணி, தெமோதற. | 30-00 |
| | 2. எம். சந்தனம், பதுளை. | 25-00 |
| | 3. பங்குத்தந்தை, புனித மரியாள் பேராலயம், பதுளை | 30-00 |
| | 4. S. ஜோண்சன், பசறை | 10-00 |
| | 5. T. நடருஜா, தெமோதற | 5-00 |
| | 6. N. S சந்தனம், தெமோதற | 5-00 |
| | 7. J. பிரான்சிஸ், ,, | 5-00 |
| | 8. J. ஜோண் ,, | 5-00 |
| | 9. செல்வி, திரேசம்மாள் ,, | 5-00 |
| | 10. M. யேசுதாசன் ,, | 5-00 |
| | 11. A. இருதயம், மு. மைக்கல், தெமோதற. | 10-00 |
| | 12. அன்ரனி செல்வருஜா பதுளை. | 20-00 |
| | 13. பிலிப் குமார் ,, | 5-00 |
| | 14. R. சந்தன பிச்சை ,, | 5-00 |
| | 15. R. அன்டனி ,, | 5-00 |
| | 16. K. ருஜநாயகம் ,, | 5-00 |
| | 17. M. யோசவ் ,, | 5-00 |
| | 18. A. அருள்தாஸ் நமுனுகல. | 5-00 |
| | 19. M. சவேரிநாயகம் கலி-எல. | 5-00 |
| | 20. S. நாயகம், பதுளை. | 5-00 |
| | 21. S. பிச்சை | 5-00 |

இலங்கைத் தமிழ் மக்களின் ஒரே கத்தோலிக்கச் செய்திப் பத்திரிகையான பாதுகாவலன் வளரத் துணைபுரியும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி ஆ-ர்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிறேம் என்கிறுர் ஆண்டவர்